விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 26 ரபி. ஆகி 24 இதழ் 361

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8—2—83

G.C.E. O/L, 1983 Dec.
பகல், மாலை, வார இறுதி வகுப்புகள்
ஆரம்பம்: 9-2-83
கணிதம் – P. ஜெயக்குமார்
விஞ்ஞானம் – K. T. தாசன்
Y. ஜெயந்திக்குமார்
சமூகக் கல்வி –K. S. முத்துலிங்கம்
தமிழ் – பட்டதாரி ஆசிரியை
ஆங்கிலம் R. தர்மலிங்கம்
சுகாதாரம் – மணிவண்ணன்
J. E. C.
33, பருத்தித்துறை வீதி,
-யாழ்ப்பாணம்.
(புகையிரதக்கடவைக்கருகில்)
6120

## கொள்ளையடிக்கப்பட்ட வான் அனுதரவாக கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னாரில் பயங்கர ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 65,500 ரூபா பெறுமதியான வான் பின்னர் அடம்பனில் அனுதரவாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முகமட் சுல்தான் காசிம் என்பவர் தமது பிள்ளைகளை சினிமா தியேட்டரில் படம் பார்க்க விட்டு விட்டு மன்னார் பஸ்நிலையத்தில் வானுடன் வந்து நின்றபோது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

4 இளைஞர்கள் வந்து வானை வாடகைக்கு அமர்த்தி சென்றதாகவும் திருக்கேதீஸ்வர சந்தியை அடைந்ததும் கத்தியைக்காட்டி பயமுறுத்தி சாரதியைக் காட்டி வெளியில் தள்ளி விட்டு சென்றார்களென்றும் கூறப்படுகிறது.

[8-ம் பக்கம் பார்க்க]

# தடுப்புக்காவலில் இருந்துவந்த மதகுருமார், நித்தி தம்பதியை றிமாண்டில் வைக்க உத்தரவு!

## ஜூன் 6க்கு வழக்கு ஒத்திவைப்பு

(இ. கந்தசாமி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று மதகுருமாரும் வேறு மூவரும் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு குற்றப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் இருவர் மீது ஒரு வழக்கும் ஐவர் மீது பிறிதொரு வழக்குமாக இருவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன- இவ்வழக்குகளின் விசாரணை ஜூன் 6-ம் திகதிக்கு ஒத்திபோடப்பட்டது.

நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களைப் பார்க்க ஏராளமான மக்கள் ஆண்களும் பெண்களுமாகத் திரண்டிருந்தனர். அவர்களில் இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் ஏராளமாகக் காணப்பட்டனர். பலத்த பொலிஸ் ராணுவ பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதிபதி மன்றிற்குள் வருவதற்கு முன்னர் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுடன் அவர்களின் உறவினர்கள் பலர் உரையாடியதைக் காண முடிந்தது.

திருமதி நிர்மலா நித்தியானந்தனின் தயார் – சகோதரி திரு. நித்தியானந்தனின் தந்தை, டாக்டர் ஜயகுலராஜாவின் மனைவி குழந்தை மற்றும் மதகுருமாரின் உறவினர் காணப்பட்டனர், உணர்ச்சிமயமாகக் காணப்பட்ட இந்த சந்திப்பின் போது உறவினர்கள் பலர் கண்கலங்கினார்கள்.

வண பிதா சின்னராயர், வண பிதா சிங்கராசா மற்றும் திரு. நித்தியானந்தன் தம்பதியினர் உற்சாகமாகக் காணப்பட்டனர். திருமதி நித்தியானந்தன் பச்சை நிற சாறி அணிந்து நெற்றியில் பெரிய பொட்டுடன் சிரித்த முகத்துடன் காணப்பட்டார்.

சந்தேக நபர்கள் அறுவரும் கதிரைகளில் அமர்ந்திருந்தனர்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரொபர்ட் சில்வா முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதல் வழக்கின் குற்றப் பத்திரிகை 481 பக்கங்களையும் நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பான வழக்கின் குற்றப்பத்திரிகை 68 பக்கங்களும் கொண்டிருந்தன.

ஆஜர் செய்யப்பட்ட அறுவரில் வண பிதா ஏ. சிங்கராயர், வண பிதா.பி. ஏ.சின்னராச ஆகிய இருவர் மீதும் தனியாக ஒரு வழக்கும் வண பிதா ஏ. சிங்கராயர், வண, பிதா எஸ். ரி. ஜயக்குலராஜா டாக்டர் ரி. டபிள்யூ ஜயக்குலராஜா, திரு. எம். பி. நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் மீது ஒரு வழக்குமாக இரு வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

குருமார் இருவர் மீதான வழக்கில் 1981-ம். ஆண்டு மார்ச் 25-ம் திகதி நடைபெற்ற நீர்வேலி வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட பிரபாகரன் உட்பட 'பயங்கரவாதிகள்'' பற்றிய தகவல்களை வெளியிடாமல் வைத்திருந்ததுடன் பொலிசாருக்கு அதனை அறிவிக்கவும் தவறியதாகவும் பிரபாகரன் உட்பட மேற்படி சந்தேக நபர்களின் நடமாட்டம் இருக்குமிடம் பற்றிய தகவல்களை வெளியிடாமல் வைத்திருந்ததாகவும் 1979 – ம் வருட இல. 48 பயங்

(8-ம் பக்கம் பார்க்க)

## சுங்க ஏல விற்பனை

8-2-1983 (புதன்) காலை 10மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழுநிபந்தனைகளும் 1954ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப் பட்ட 10675ம் இலக்க அரசாங்க வர்த்தமானி 1ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1. 12 மூடை நனைந்தபீடி இலைகள்.
2. 9 மூடை நல்ல பீடி இலைகள்.
3. 1 கட்டு நனைந்த துணிகள்

எஸ். எம். ஜே சேனரத்ன,
சுங்க சேகரிப்பாளருக்காக
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
7 - 2 - 83.

6126

### விழிப்புக்குழுவிடம் சிக்கியஇளைஞர்கள்

## பொலிஸ் விசாரணையில் மேலும் ஒருவர் பிடிபட்டார்

[யாழ்ப்பாணம்]

தாவடிச் சந்தியில் வைத்து துப்பாக்கியுடன் பிடிபட்ட இரு இளைஞர்களின் விசாரணையைத் தொடர்ந்து மேலும் ஒரு இளைஞரை பொலிசார் சந்தேகத்தின்பேரில் நேற்றுக் கைதுசெய்தனர்.

உடுவில் மல்வத்தைச் சேர்ந்த ஆறுமுகம் குணராசா (22 வயது) என்பவரே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

கடந்த ஞாயிறு அதிகாலை சந்தேகத்துக்கிடமான முறையில் 'ஷொட் கன்' ரக துப்பாக்கியுடன் தாவடிச் சந்தியில் அமிர்தநாதர் கணேசலிங்கம், கந்தையா புண்ணியலிங்கம் ஆகிய இருவரும் நடமாடியபோது கோண்டாவில்மேற்கு விழிப்புக்குழுவினர் அவர்களிருவரையும் பிடித்து, சுன்னு

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

## உண்ணுவிரதத்தை கைவிட்டனர்!

### இன்று விரிவுரைகளுக்குச் செல்வர்

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கடந்த ஏழு நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணுவிரதப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 4 மணியுடன் கைவிடப்பட்டது.

சுதந்திரதினத்தை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளும் நேற்று மாணவர்களால் அகற்றப்பட்டன.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஜெயப்பிரகாஷின் தாயார் திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் மாணவ, மாணவிகளுக்கு குளிர்பானம் கொடுத்து உண்ணுவிரதத்தை முடித்துவைத்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

# சித்திரவதை பற்றி விசாரிக்க குழு நியமிக்கவும்!

## ஜனாதிபதிக்கு வண. பிதா சிங்கராயர் கடிதம்

(கொழும்பு)

பொலிசார் தம்மையும் ஏனைய தமிழ் இளைஞர்களையும் சித்திரவதை செய்த விதம்பற்றிய புகார்கள் குறித்து விசாரணை செய்ய பாரபட்சமற்ற விசாரணைக் குழுவொன்றை நியமிக்கக் கோரி தற்பொழுது விளக்க மறியலில்வைக்கப்பட்டுள்ள வண. பிதா. சிங்கராயர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து எழுதப்பட்டுள்ள இக் கடிதத்தில் தமது கோரிக்கைகள் குறித்து 15 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் வண. பிதா. சிங்கராயர் தெரிவித்துள்ளார்.

நான் ஒரு கத்தோலிக்க குருவாகவிருப்பதால் பொறுப்பான சில சமயப்பணிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. எனவே என்னை உடனே விடுதலை செய்யவேண்டும் என

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டமெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில். (The School of Computer Studies) 52/1. கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல் மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

## விற்பனைக்கு

யாழ். சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. குமாரசாமி (சின்னவாணம்) 39/10 மின்சார நிலைய வீதி, 3வது ஒழுங்கை, யாழ்ப்பாணம். 6102

## WANTED

Wanted scooter or small car (preferably one owner-above EL 9000 series). Detailed written replies Ratnavel, Accountant, Police Office, Jaffna Telephone: 23202. (6114)


# மகாதேவா தாம்போதியில் உபதபாலதிபர்கள் சிரமதானம்

## பொறியியலாளர் பாராட்டு

(வண்ணார்பண்ணை)

அகில இலங்கைத் தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் தொழிற் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளை உறுப்பினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மகாதேவா தாம்போதி சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இச்சங்கத்தின் யாழ் கிளைத் தலைவர் திரு. சி. இரத்தினசபாபதி தலைமையில் நடந்த இச்சிரமதானப் பணியில் 25 மேற்பட்ட உபதபாலதிபர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களின் இம்முன்மாதிரியான பணியை ஏனைய தொழிற் சங்கங்களும் பின்பற்றவேண்டும் என்று பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் திருஎஸ். இராமகிருஷ்ணன் இவ்வைபவத்தில் தெரிவித்தார். இத் தேசிய பணியில் பல பொது ஸ்தாபனங்கள் கலந்து கொண்ட போதிலும் தொழிற்சங்க ரீதியாக இப்பணியைச் செய்ய உப தபால் அதிபர்கள் சங்கமே முன்வந்துள்ளது என்றும் அவர் சொன்னார். (வண், அ)

# தாயைக் கொடுமைப்படுத்திய தந்தை கொலை; மைந்தன் கைது !

(சாலி)

குடித்துவிட்டு வீடு வந்து தனது தாயைத் தந்தை கொடுமைப்படுத்துவதைச் சகிக்காத மைந்தன், தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் கத்தியை எடுத்து ஒரே வீச்சில் தந்தையின் கழுத்தை வெட்டிக் கொலை செய்த பயங்கரச் சம்பமொன்று அக்குரஸ்ஸை ஹூலந்தாவை தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மகனின் கத்தி வீச்சுக்கு இலக்காகித் தன் உயிரைப் பறிகொடுத்தவர் தோட்டத் தொழிலாளியான சண்முகம் என்பவராவார்.

எட்டாம் வகுப்பு மாணவனான எஸ். கலைச்செல்வன் (வயது 15) என்பவரே தந்தையை வெட்டிக் கொலை செய்துவிட்டு பொலிசில் சரணடைந்தவராகும்.

சண்முகத்தின் மரணம் தொடர்பாக மொறவக்க நீதவான் திரு. பட்டுவத்துடாவ விசாரணையை மேற்கொண்டார். அப்போது பின்வரும் தகவல்கள் வெளியாயின;-

''காலஞ் சென்ற சண்முகத்திற்கு தன் மனைவி மீது சந்தேகம் ஏற்பட்டதாகவும், அடிக்கடி குடித்து மனைவியைத் தாக்கியதாகவும், சம்பவதினமும் மனைவியையும், மகனையும் தாக்கிவிட்டு அவர்களை வீட்டுக்கு வெளியே தள்ளி வீட்டினுள் புகுந்து கதவை அடைத்தாரென்றும், பின்னர் காலையில், கதவைத் திறந்து வெளியில் நின்ற தனது மனைவியை மீண்டும் மிருகத்தனமாகத் தாக்கவே பொறுமையை இழந்த மகன் தனக்கு வந்த ஆத்திரத்தில், கத்தியை எடுத்து தந்தையின் கழுத்துக்கு நேரே வீசித்தாக்கினார் என்றும் அதைத்தொடர்ந்து தந்தை நிலத்தில் விழுந்து துடி துடித்து உயிர் மாண்டார் என்றும் தகவல்கள் வெளியாயின.

கொலை என்று தீர்ப்பு வழங்கிய நீதவான் கலைச்செல்வனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மன்றங்களின் தொண்டு

(வவுனியா)

இளம்பிள்ளைகளுக்கு சைவ சமய உண்மைகளைப் போதித்து அவர்களுக்குத் தெய்வ நம்பிக்கையை ஊட்டி எதிர்காலத்தில் நம்பிக்கையை வளர்க்க நல்ல வழியில் இட்டுச்செல்வதற்குப் இந்துமக்கள் மன்றங்கள் தொண்டாற்ற வேண்டும். வவுனியா மாவட்ட பதில் நீதிபதி திரு இ வ. வில்வராசா மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

தைப்பூசத் தினத்தன்று மேற்படி மன்றம் வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த வைபவத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பின்வருவோர் மன்ற நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வவுனியா மாவட்ட பதில் நீதிபதி திரு. வ. வில்வராசா, உப தலைவர் திரு. அ சிவநாதன், செயலாளர் திரு. மு. ஜெயபாலன், உப செயலாளர் திரு. ச. குமாரசாமி, தனாதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம். கமிட்டி உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சுதுமலையில் பாலர் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை காந்தீய பாலர் பாடசாலையின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இப் பாலர் பாடசாலை மண்டபத்தில் திரு கு நிலையம்பலம் தலைமையில் நடந்த இவ்விழாவில் காந்தீயசேவாசங்க மாவட்டத் தலைவர் டாக்டர் அ. நவரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சுதுமலை அ. த. க. பாடசாலை அதிபர் திரு இ. வல்லிபுரம் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும், விருந்தினர்களது சிறப்புரைகளும் இடம்பெற்றன. பாடசாலை ஆசிரியை நன்றியுரை நிகழ்த்தினார். (வண். அ.)

# புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக்கழக பொதுக்கூட்டம் தலைவர் திரு. ஆ. கணபதிநாதன் தலைமையில் நடைபெற்ற பொழுது உபவிதிகளின் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதைத்தொடர்ந்து பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் ஆ. கணபதிநாதன், உபதலைவர்கள்: திரு. கே. ஞா. தியாகராசா, திரு. வி. சிமியோன், இணைச் செயலாளர்கள்: திரு. ஏ. ஜி. பெனன்டோ, திரு. எஸ். திருநாவுக்கரசு, பொருளாளர் திரு. ஜே. சி. சாமுவேல்

தொகுதிவாரியாக 24 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★

(வல்வெட்டித்துறை)

கம்பர்மலை சந்திரங்கை டொன் கந்தையா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தலைவர் திரு. நா. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. பூ சக்திவேல், உபதலைவர் திரு. மா. கமலாகரன், செயலாளர் திரு. ந முரளிதாஸ், பொருளாளர் திரு. மா. கமலதாஸ் ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# வவுனியாவில் இளைஞர் விழா

(வவுனியா)

வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் மார்ச் மாதம் 4, 5, 6-ம் திகதிகளில் வவுனியா நகரசபை முற்றவெளியில் இளைஞர் விழாவைக் கொண்டாடவுள்ளது.

விழாத் தொடர்பாக விளையாட்டு, கலாச்சாரப் போட்டிகளை வவுனியா மாவட்ட இளைஞர் சேவை மன்ற அலுவலகம் நடத்த உத்தேசித்துள்ளது.

போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் இம் மாதம் 15-ம் திகதிக்குமுன்பு வவுனியா கிளை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும்படி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி அறிவித்திருக்கின்றார்.

போட்டிகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய சுற்றிக்கைகள் இங்குள்ள சகல சமூக சேவை தொண்டர் நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. [க]

# முத்துக்குளிப்பு மார்ச்மாதம் வரை நடக்கும்

[மன்னார்]

மன்னார்-சிலாபத்துறை கடலில் முத்துக்குளிக்கும் வேலை மார்ச் 31ம் திகதிவரை நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் கடல்தொழில் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

கடல் தொழில் அமைச்சின் சிபார்சின் பேரிலேயே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

# சிவராத்திரிதின விழாவில் சாயிபாபா தரிசனங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தாரின் சிவராத்திரி தின விழா, எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும்.

அடுத்த நாள் காலை வரை நடைபெறும் சிவராத்திரிதின விழாவில் விசேட நிகழ்ச்சியாக பஜனையுடன், பகவான் சத்திய சாயி பாபா புதுடில்லி விஜயம், புட்டபர்த்தியில் சிவராத்திரி விழா, பாபா பிறந்த தின விழா சம்பந்தப்பட்ட தரிசனக் காட்சிகள் திரைப்படங்களாகக் காண்பிக்கப்படும்.

# இன்றைய பலன்

தை மாதம் 26-ந் திகதி

செவ்வாய்க்கிழமை

(8—2—83)

மேடம்: பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகிறது, அமைதியான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களுடைய நட்பை பெறுவீர்கள்.

இடபம்; நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம், கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மிதுனம்: வாழ்க்கையில் கலகலப்புத் தென்படும், இல்லத்தில் சுவையான சம்பவம் இடம் பெறும், நாடகக் கலைஞர்களுக்கு இன்று வெற்றித் தினம்.

கடகம்: நண்பர்களின் நச்சரிப்பு மனக் குழைச்சலை ஏற்படுத்தும், கடமையாற்றுமிடத்தில் எழுகுப்பார்வை வட்டமிடும், மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காகலாம்.

சிங்கம்: பொதுத்துறையில் நாட்டம் ஏற்படும், சிலர் ஜுரத்தாலும் பீடிக்கப்படலாம், பிதாவழியின் மூலம் ஆதரவுக்கு இடமுண்டு.

கன்னி: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள், மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும், வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கும், உல்லாசப் பயணம் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும், சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், பொதுமக்களின் அன்பு பெருகும், புகழ் சேரும்.

விருச்சிகம்: மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும், வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கும் இடமுண்டு, சிலபாதிப்பும் நடக்கலாம்.

தனுசு: என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் இன்று கோட்டைவிட நேரிடலாம், முகமன் பேசுபவர்களிடம் மிகவும் எச்சரிக்கை வேண்டும்.

மகரம்: பிறருடைய மதிப்பிற்கு சிலர் இலக்காகுவார்கள், வரவேற்க வேண்டிய செய்தி இன்று கிடைக்கும், சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்.

கும்பம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும், சகோதர வழியால் எதிர்பார்த்த வரவுகள் தடைப்படலாம், இளமை நினைவுகள் வேதனையைத் தரும்.

மீனம்: கருத்து வேற்றுமை மறைவதற்கு இடமுண்டு, தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள், நீண்டகால பயனளிக்கக்கூடிய பொருள் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை.

# வெள்ளை நோயால் நெற்பயிர் அழியும் அபாயம்

(துணுக்காய்)

துணுக்காய்ப் பகுதியிலுள்ள மல்லாவி, யோகபுரம், தென்னியங்குளம், கல்விளான், வவுனிக்குளம் போன்ற பகுதிகளிலுள்ள வயல்களில் வெள்ளை நோய் பரவி வருவதால் விவசாயிகள் பெருங்கவலை கொண்டுள்ளனர். அபாயகரமான இந்நோய்ஏற்பட்டு இப்பகுதி நெற்பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விவசாய இலாகாவினரும், கமத்தொழில் இலாகாவினரும் கூடிய அக்கறை கொண்டு வயல் வெளிகளில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது அதிகாரிகள் நெற்பயிர்களைப் பரீட்சித்துத் தேவையான மருந்து வகைகளை வழங்கி விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். இந்நோய் கூடிய விரைவாகப் பரவக்கூடியதான படியால் விவசாயிகள் அதிக அக்கறை எடுக்கும்படி விவசாய, கமத்தொழில் இலாகாவினர் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (அ)

சிறுதானியங்கள்:

# கொள்வனவு செய்ய ஏற்பாடு

(வவுனியா)

கூட்டுறவு மொத்த ஸ்தாபன பிராந்திய முகாமையாளர் வவுனியாவில் உப உணவு சிறுதானியங்களை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளனர்.

நாளாந்த சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு உழுந்து கொள்வனவு செய்யப்படவிருக்கிறது.

விவசாயிகளுக்கு நல்ல விலையை பெற்றுக் கொடுக்கு முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுயிருப்பது தெரிகின்றது, கமநலசேவை மூலமாகவே உழுந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான தீவிர நடவடிக்கைகளில் விவசாய இலாகா பகுதியினர் இறங்கியுள்ளனர். [க]

# வருடாந்த உற்சவம்

(மன்னார்)

மன்னார் புனித மாதா ஆலய வருடாந்த திருநாள் உற்சவம் கொண்டாடப்பட்டது. திருநாள் திருப்பலிப் பூசையை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஒப்புக்கொடுத்தார்.

தொடர்ந்து புனித மாதா திருச் சொரூபம் மன்னார் பட்டினவீதி வழியாக இடம்பெற்றது. (க)

# புதுடில்லி 'குட்டி' பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றி

## எதிர்க்கட்சி கூட்டணி படுதோல்வி

**புதுடில்லி, பெப். 7 புதுடில்லி பெருநகர் கவுன்ஸிலிலும் புதுடில்லி மாநகராட்சிமன்றத் தேர்தலிலும் இந்திரா காங்கிரஸ்கட்சி ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியுள்ளது.**

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற புதுடில்லி பெருநகர் கவுன்சில் தேர்தலில் மொத்தம் 56 உறுப்பினர்கள் தெரிவுபெறுவார்கள். இன்றுவரை வெளிவந்துள்ள முடிவுகள் 53இல் ஆளும் இந்திரா காங்கிரஸ்கட்சி 33 இடங்களைப் பிடித்துள்ளது. பாரதீய ஜனதா கட்சி 17 இடங்களையும், லோக்தாள் கட்சி 2 இடங்களையும், ஜனதா கட்சி ஒரு இடத்தையும் பெற்றுள்ளன. 5 கட்சிகளின் கூட்டமைப்பான முற்போக்கு ஜனநாயகக்கட்சிபடுதோல்வியைத் தழுவியுள்ளது.

1965இல் உருவாக்கப்பட்ட புதுடில்லி பெருநகர் கவுன்ஸிலுக்கு தற்பொழுது நடத்தப்பட்ட தேர்தல் 4வது தேர்தலாகும். கடந்த 1972இல் நடத்தப்பட்ட தேர்தலிலும், தற்போதைய தேர்தலிலும் புதுடில்லி பெருநகர் கவுன்சிலின் ஆட்சிக் கட்டுப்பாட்டை ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1972இல் ஆளும் இந்திராகாங்கிரஸ் 47 இடங்களை புதுடில்லி பெருநகர் கவுன்சிலில் பெற்றிருந்தது. தற்போதைய தேர்தலில் மூன்று ஆளும் இந்திராகாங்கிரஸின் உள்ளூர் பிரமுகர்கள் தோல்விகண்டுள்ளனர்.

கடந்த சனி நடைபெற்ற மற்றுமொரு புதுடில்லி உள்ளூராட்சிமன்ற, மாநகராட்சி மன்ற தேர்தலில் ஆளும் இந்திராகாங்கிரசிற்கே அறுதிப்பெரும்பான்மை கிடைத்துள்ளது. மொத்தம் 100 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் இன்றுவரை வெளியான 93 முடிவுகளில் 55 இடங்களை ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி பெற்று, அறுதிப்பெருமான்மையைப் பெற்றது. ஏனைய கட்சிகளின் நிலவரம் வருமாறு: பாரதீய ஜனதாகட்சிக்கு 29 இடங்கள். ஜனதா கட்சிக்கு ஒரு இடம். சுயேட்சை உறுப்பினர் ஒருவர், லோக்தாள் கட்சிக்கு 2 இடங்கள். முஸ்லிம் லீக் கட்சிக்கு ஒரு இடமும் 5 கட்சிகளின் முறபோக்கு ஜனநாயக கூட்டணிக்கட்சி ஒரு இடத்தையும் கைப்பற்றமுடியாது படுதோல்விகண்டுள்ளது. [உ]

## சர்வதேசப்புகழ்பெற்ற நூலாசிரியர் விஞ்ஞானி மரணமானுர்கள்

சென்னை, பெப் 7 தமிழகத்தின் கலை நிபுணரும், உலகப்புகழ் பெற்ற நூல்களின் ஆசிரியருமான கலாநிதி சிவராமமூர்த்தி நிகழ்ச்சி ஒன்றில் கடந்த ஞாயிறு மாலை உரையாற்றுகையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானுர்.

0

இந்தியாவின் முதுபெரும் பிரபல விஞ்ஞானியும், தனித்துவமான விஞ்ஞான ஆய்வுகளை ஏற்படுத்தியவருமான கலாநிதி காந்தராம் தமது 74வயதில்கடந்த ஞாயிறு இயற்கை மரணமெய்தினுர். கலாநிதி காந்தராம் உலகின் கண்ணுடித் தொழில்துறையின் வல்லுனராகவும், பாரத அணுசக்தி நிறுவனத்தின் உறுப்பினராகவும் விளங்கியவராவார். [உ]

## நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் பங்குபெறும் சர்வதேசமாநாடு

புதுடில்லி, பெப் 7 நோபல் பரிசுபெற்ற 18 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், உலகநாடுகளின்பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் கலந்துகொள்ளும் சுகாதார நலவாழ்வும் - 'நோய்க்கூறுகளும்' என்னும் சர்வதேச மகாநாடு நேற்று ஞாயிறு புதுடில்லியில் ஆரம்பித்துள்ளது

இச்சர்வதேச மாநாட்டை பாரத மத்திய அரசின் சுகாதாரத் துறைகள் அமைச்சர் திருமதி ஷீலா ஆரம்பித்து வைத்தார். இம் மகாநாட்டில் பல நோய்க்கூறுகள் பற்றிய ஆய்வுகட்டுரைகள், ஆய்வுகள், சுகாதார நல்வாழ்வு முடிவுகள், ஆலோசனைகள் பற்றி ஆராயப்படவுள்ளது. இம் மாநாட்டை உலக சுகாதார நிறுவனமும் பல நாடுகளும் ஏற்பாடுசெய்துள்ளன. (உ)

அணிசேரா நாடுகள்

## புதிய பொருளாதார அமைப்பை உருவாக்க கியூபா கோரிக்கை

ரங்கூன், பெப். 7 "அணிசேரா நாடுகள் தமது பொருளாதாரப் பிரச்னைகளுக்கு சுயதீர்வுகளைக் காணுவதற்கான நடைமுறைத் திட்டமொன்றினையும், அணிசேரா நாடுகள் புதிய பொருளாதார அபிவிருத்தி அமைப்பை உருவாக்குவதற்கும் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் 7வது உச்சிமகாநாடு முதன்மைகொடுத்துச் செயல்படவேண்டும் என கியூபா வற்புறுத்தவுள்ளது."

கடந்த ஞாயிறு ரங்கூனில் வைத்து கியூபா அதிபர் ஸ்ரோம்போலில் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். பர்மாவிற்கான விஜயத்தினை மேற்கொண்டு ரங்கூன் வந்துள்ள கியூபா அதிபர் ஸ்ரோம்போலில் பர்மியபிரதமர், மற்றும் அமைச்சர்களால் கௌரவிக்கப்பட்டு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்திலே பங்குகொண்டு அணிசேரா நாடுகளின் 7வது உச்சிமகாநாட்டில் கியூபா முன்வைக்கவுள்ள கோரிக்கையைக் குறித்துத் தகவல்களை வெளியிட்டார். (உ)

# சர்வகட்சி மகாநாடு

## எம். ஜி. ஆர். கூட்டுகிருர்

சென்னை, பெப் 7 தமிழ்நாட்டில் சர்வகட்சிகளின் தலைவர்களைக்கொண்ட மகாநாட்டை அடுத்தமாதம் கூட்டுவதற்கான உறுதியைத் தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றஅமர்வில் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் அளித்தார்.

தமிழ்நாடு மாநில சட்டப்பேரவை மன்றக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் கேட்டகேள்வி ஒன்றினை அடுத்தே தமிழக முதலமைச்சர் இந்த உறுதிமொழியைக் கொடுத்தார். மேலும் முதலமைச்சர் தமிழகத்தில் பருவநிலைமைகளின் ஒத்துழைப்பு இன்மையால் ஏற்பட்டுள்ளஉணவுப்பொருள் பயிர்களின் பாதிப்புக்குத்தமது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்தார். [உ]

## "மக்களின் தேவைக்காக மரங்களை நாட்டவேண்டும்"

(சித்தன்கேணி) இலங்கையின் சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவைகளும் அதிகரித்துக்கொண்டு போகின்றது ஆதலால் மரங்களை நாட்டவேண்டியது இன்றைய காலகட்டத்திலே அவசியமானதாகும். சிங்கப்பூரில் ஒரு மரத்தை தறிப்பதாயின் மரமொன்றை நட்டபின்பே தறிக்கமுடியும் என்று சிங்கப்பூர் அரசாங்கம் சட்டம் வகுத்துள்ளது. ஆனல் எமது நாட்டில் அப்படிப்பட்ட சட்டம் இல்லாமையினுல்தான் மரங்கள் அழிந்துகொண்டு போகின்றது. இப்படியான விழாக்களினுல்தான் மரங்களை உண்டாக்க முடியும்."

இவ்வாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதயசபையினுல் கொண்டாடப்பட்ட மரம்நாட்டு விழாவில் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கிழக்கு கிராமோதயசபைத்தலைவர் சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. பூபாலசிங்கமும் வலிமேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேலும் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்கள்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு தணிவி குடியேற்றத்திட்ட வீட்டுக்காரர்களுக்கு எலுமிச்சை, பலா, அகத்திபோன்ற மரக்கன்றுகளை இலவசமாக அன்பளிப்புச்செய்தார். மரக்கன்று நாட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி திரு. வைகுந்தவாசன் பாடல்களைப்பாடினுர்.

வட்டுக்கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. ஆ. முருகேசு வரவேற்புரை நிகழ்த்தினுர். அதிபர். திரு. கா. ஐயாத்துரை, திருமதி. கு. மகேஸ்வரி, திரு. கா. ச. சற்குணநாதன் உட்பட இன்னும் பலர் சொற்பொழிவாற்றினுர்கள். (க)

## "அமைதியும் சமாதானமும் உலகின் இரு கண்களாகும்"

### — தமிழக சபாநாயகர்

காரைக்குடி, பெப். 7 அமைதிக்கும் சமாதானத்துக்குமான மகாநாடு ஒன்று தமிழ்நாடு காரைக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

மகாநாட்டுக்கான கூட்டத்தை தமிழ்நாடு சட்டப்பேரவைமன்ற சபாநாயகர் ராஜாராம் ஆரம்பித்து வைத்துத் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்;

"அமைதியும் சமாதானமும் இன்றைய உலகின் இரு கண்களாக மக்கள் கொள்வதன்மூலமே நிலையான நல்வாழ்வுபெறமுடியும். உலகில் எந்த ஒரு மூலையிலும் இன்று அச்சம், பயங்கரம், பயமுறுத்தல், கொடுமைகள் நாளுக்கு நாள் வளர்ந்து அழிவுப்பாதைக்கு உலகை இட்டுச் செல்கின்றன. இது உலக மக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர் வாழ்விற்கான பயங்கரமான சவாலாகும். மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் அமைதிக்கும் சமாதானத்துக்கும் எந்தளவுக்கு முதலிடம் கொடுக்கின்றனரோ அந்த அளவுக்கு உலகில் அமைதியும் சமாதானமும் நிலைநிறுத்தப்படும்." [உ]

## சுப்பிரமுனியர் மீண்டும் வருகிருர்

(சுழிபுரம்) ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மீண்டும் இவ்வாண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளார். சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும், கடந்த விஜயத்தின்போது ஆங்காங்கே பேசிய சில கருத்துக்களும் தமிழ்மொழியில் நூல்வடிவில் வெளியிட ஏற்ற ஒழுங்குகளை வழக்கம்பரை சைவ சமூக பஜனைச்சபையினர் மேற்கொண்டுள்ளனர், நூல் தொகுப்பை சபைச் செயலாளர் திரு. க. வாமதேவன் மேற்கொண்டுள்ளார். (அ)

## அகாலித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்

அமிர்தசரஸ், பெப் 7 அகாலித் தலைவர், மத்திய அரசின் முத்தரப்புப் பேச்சுக்கள் மீண்டும் நடைபெற அகாலித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து, அகாலித் தலைவர்கள் அமிர்தசரஸில் நேற்றுக்கூடி முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு முன்பாகத் தமது ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினுர்கள்.

ஆலோசனைக் கூட்டத்தில் அகாலித் தலைவர்கள் முன்வைத்து நடத்தும் கோரிக்கைகள் மீண்டும் மத்திய அரசிடம் வற்புறுத்தப்படும் அகாலிகள் தனித்துவம் நிலைநிறுத்தப்படும். அதேவேளையில் மத்திய அரசின் இணக்க நிலைமைகளுக்கு இடமளிக்கப்படும் என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன. [உ]

## அமைச்சரவை பதவியேற்பு

பம்பாய், பெப். 7 மகாராஷ்டிரா மாநிலத்தில் 36 அமைச்சர்களைக்கொண்ட புதிய அமைச்சரவை இன்று (திங்கள்) பதவி ஏற்றது. பதவியேற்பு பம்பாயில் மகாராஷ்ட மாநில ஆளுநர் அல்ஹாஜ் லதீப் முன்னிலையில் நடைபெற்றது.

பதவியேற்றுள்ள 36 பேர் கொண்ட புதிய அமைச்சரவையில் முதலமைச்சர், துணை முதலமைச்சர் உட்பட 14 அமைச்சர்கள் கபினட் அந்தஸ்துடைய அமைச்சர்களாக உள்ளனர். ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் புனரமைப்புமூலம் பதவியேற்கும் முதலாவது மாநில அரசின் அமைச்சரவை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். [உ]

# பெண்களுக்குத் தனியாக தொழில் நுட்பக் கல்லூரி!

## தமிழ்நாட்டில் அனுமதி

திருச்சிராப்பள்ளி, பெப்; 7 தமிழகத்தின் உயர்கல்லூரிகளில் பல்தொழில் நுட்பக் கல்விக்கும், பெண்களுக்குத் தனியான பல்தொழில் நுட்ப நிறுவனம் நிறுவதற்கும், தனியார்கள் பல்தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் தமிழக மாநில அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான கலாநிதி குழந்தை சுவாமியின் கல்வி அறிக்கையினையும், நடவடிக்கைத் திட்டங்களையும் புதிய கல்வியாண்டுமுதல் நடைமுறைப்படுத்தவும் அங்கீகரித்துள்ளது.

திருச்சிராப்பள்ளியில் அரும்பொருள் காட்சிக் கூடமொன்றினைத் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழக அரசின் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் மேற்படி தகவலைத் தெரிவித்தார். மேலும் அமைச்சர் அரங்கநாயகம் கூறியதாவது!

"தமிழகத்திலமுதன்முதலாகப் பல்தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றினை பட்டுக்கோட்டையில் தனியார் நிறுவுவதற்கான அனுமதியை தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்துறையில் தனியாரின் சேவைக்கு மாநில அரசு ஆதரவும் வசதிகளையும் வழங்கத் தீர்மானித்துள்ளது என்றுர்" [உ]

### மணிவாக்கு

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

— குறள்

# நமது நோக்கு

## மரியாதை வாரம்

துரிதசெயல் திட்டங்கள் இந்தத் தொழில் நுட்ப யுகத்தில் அரிய சாதனைகளை இயற்றுகின்றன. நாம் வாழும் உலகம் ஒரு சற்பத உலகம்!

மாஸ்கோவில் காலை பாடசாலை போகும் மாணவர்கள் ஒரு கட்டிடம் ஆரம்பமாவதைப் பார்க்கின்றனர். மாலை வீடு திரும்பும்போது பலமாடிக் கட்டிடமாக அது காட்சியளிக்கிறது.

தூரமேற்கு அமெரிக்காவிலும் தூரகிழக்கு யப்பானிலும் இவ்வித அதிசயங்கள் தினசரி நிகழ்ச்சிகள்! ஒருநாளில் முடிவுறும் ஆக்கங்கள் இவ்வாறுனால் ஒரு வாரம் எவ்வாறிருக்குமென்பது கற்பனைக்கெட்டாததல்ல.

தொழில் நுட்பத்துறையிலே தான் இவ்வித அற்புத சாதனைகள் இயற்றப்படுகின்றன. ஆக்கவும் அழிக்கவல்ல இயந்திர உலகம் இது.

மனித பண்பாடு, ஒரு நாளில், ஒரு வாரத்தில் உயர்ச்சியடைவதற்கு விஞ்ஞான ரீதியில் எவ்வித கண்டுபிடிப்பும் உதவுவதாகத் தெரியவில்லை. இதயத்தில் எழும் உணர்ச்சியை விஞ்ஞானம் தொடத் துணியவில்லை.

இவ்வாரம் மத்திய பிராந்திய போக்குவரத்துச்சபை நடத்தும் 'மரியாதை வாரம்' ஒருவித துரித செயல்திட்டமென்று கொள்ளலாம்; ஆனால் வார முடிவில் நோக்கம் நிறைவேற்றப்படுமென்று நம்ப எவ்வித ஆதாரமும் இல்லை: பழைய குருடி கதவைத் திறவடி என்ற குரலுக்கு என்றும் இடமுண்டு.

அதேசமயம், இந்த ஒரு வாரம் தான் 'மரியாதை'க்குஇடமுண்டு என்று மத்திய பிராந்திய போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் அஞ்சவேண்டியதுமில்லை.

மரியாதை என்பது விற்பனைக்கோ பாவிப்புக்கோ உரிய பொருளல்ல என்பது தெரிந்ததே. இருந்தும் அப்பண்பு பிறப்பிலேதான் உண்டென்று முடிவுகட்டிவிட்டால் சமூக வாழ்க்கை ஸ்தம்பித்துவிடும்.

பிறவிக்குணமென்ற பதத்துக்கு கருத்துண்டு; குலத்தளவே யாகுமாம் குணமென்ற மூதாட்டியின் முதுமொழி இன்றும் கருத்துடையதாகக் காணப்படுகிறது; ஆனால் இந்த யுகம் சாதாரண மனிதனின் யுகமென்பதை மறந்து விடலாகாது.

மக்கள் ஆட்சியில் ஜனநாயக வாழ்வில் 'பிறவிக் குணமும்' 'குலமும்' சமுதாய முன்னேற்றத்துக்கு ஒவ்வாத கருத்துக்கள்.

நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் இந்தக்கருத்தை தமது குறிக்கோளாகப் பிரகடனம் செய்திருக்கிறார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

'நாட்டு மக்கள் அனைவரும் சமம்' என்ற ஜனாதிபதியின் தாரக மந்திரம் திரும்பவும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் இது வேறொரு நாட்டில் பேசப்பட்ட செய்திபோலிருக்கிறதென்று ஐயம்கொள்ள இடமுண்டு; ஆனால் ஜனநாயக ஆட்சியின் எந்த அம்சத்திலும் சாதி,குல மத, அரசியல் பேதங்கள் இடம் பெறக்கூடாதென்பதை நாட்டில் வசிக்கும் எந்தப் பிரஜையும் ஆட்சேபிக்கத் துணியார்.

நாமிங்கு விளக்க வந்த விடயம். மரியாதை, பண்பாடு. ஒரு பொருளாதார அரசியல் அல்ல சமூகசீர்த் திருத்த திட்டங்களில், துரித வளர்ச்சிக்கு ஒவ்வாத காரியமென்பதே!

இருப்பினும் கல்விபோல், தொழில்போல், ஊண் உடைபோல், ஒவ்வொருவருக்கும் பண்பாட்டு வாழ்க்கை அவசியம்; அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிய மனிதபண்பு — மரியாதை, இயற்கையில் இல்லாவிட்டாலும் செயற்கையால் பயிற்சியால் வளர்க்கப்படவேண்டிய பயிர். எல்லாத்துறைகளுக்கும் பொதுவான பயிர்.

ஒருவாரத்தில் சீ.ஆர்.ரீ.பி. — மத்தியபோக்குவரத்துச்சபை எதனை வெட்டி விழுத்தப் போகிறதென்று கிண்டல் செய்வது சுலபம். ஆனால் இத்துறையில் மலிந்து வரும் அநாகரிக, பண்பற்ற முரட்டுத்தனமான, கொடுமையான, ஏன் காடைத்தனமான சொல்லும் செயலும் இந்த நாட்டின் பெருமைக்கு தீராத இழுக்கென்பதை நாம் உணர வேண்டும்.

இ. போ. ச. பஸ் என்றால் அதன் சாரதியோ, நடத்துநரோ இவர்கள் தான் குற்றவாளிகளென்று முறைப்பாடுகளை மனனம் பண்ணுவது நியாயமாகாது. இன்றைய போக்குவரத்து நெருக்கடியை இந்தநாடு என்றும் கண்டதில்லை; இந்தப் புரட்சிகரமான மாற்றத்துக்கேற்ற மரியாதை பரிணமிக்கும் பழக்கவழக்கங்கள் வேண்டியளவு வளரவில்லை; புது இரத்தம் இச்சேவையில் நம்பிக்கை கொள்ள உதவுகிறது.

பஸ் பிரயாணியாக பல வருட சேவை கண்ட ஒருவர் இவ்விடயம்பற்றி எந்த கருத்தை முன்வைப்பார்?

மரியாதை வாரத்தின் அவசிய கொள்கை என்ன?

மரியாதை, காதல் போல் இரு பகுதிகளுக்குண்டான தொடர்பு. எமது வீட்டில் நாம் நினைத்தபடி காலைக் கதிரைக்கு மேல தொங்கவிட்டு பத்திரிகை வாசிக்கலாம், வெளியில் இதற்குக் கட்டுப்பாடுண்டு.

இக்கட்டுப்பாடு இருவருக்குள் கருத்தாக உருவெடுக்கும். அக்கருத்தை வெளிப்படுத்துவது பேச்சுமூலமென்பது வெளிப்படை.

பேச்சே பண்பாட்டைக் குறிப்பது. இன்சொல் இனிய பயன், கடுஞ்சொல் என்றால் கெட்டபயன்.

இனிய சொற்கள் சொல்லி அதன் இன்பத்தைக் கண்ட பின்னர் மக்கள் இ. போ. ச. உட்பட என்ன காரணங்கொண்டு வன்சொல்பேசுகிறார்கள்!

இந்த மடமையை ஒருவாரத்தில் நீக்க முடியாவிட்டாலும், இவ்வித பயிற்சி பயன்தரும்.

# உயர் கல்வித் துறையில் வர்த்தகமும் கணக்கியலும்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நிலவிய கல்விமுறையில் இருந்து இலங்கையின் இன்றைய கல்விமுறை பெரிதும் மாற்றமடைந்து அபிவிருத்தி அடைந்து வந்துள்ளதை எவரும் குறிப்பிட்டுத்தான் புரிந்துகொள்ள வேண்டியதில்லை கல்விமுறை அந்தளவுக்கு மாற்றமடைந்து வளர்ச்சியடைந்தாலும் உயர்கல்வி பெறுதலில் உள்ள கட்டுப்பாடு, பல்கலைக்கழகப்பிரவேசக் கட்டுப்பாடு, என்பன மாணவர்களின் திறமையைப் பெரிதும் வளர்ச்சியடையச் செய்வதில் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன எந்தளவுக்குத் திறமைகள் வளர்ச்சி அடைந்தாலும் அது எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பனைப் பங்களிப்புச் செய்வதில் பாடசாலைகள் அந்தளவிற்கு முக்கியம் பெறமாட்டாது என்பது பலரது கருத்து. பாடசாலைகள் சிறந்த மாணவர்களை உருவாக்காமல் கிராமப்புறச்சிறந்த மாணவர்களே சிறந்த பாடசாலைகளை நிலை கொள்ளச் செய்கின்றனர்,

பாடசாலைகளின் சிறப்புப் பெருமளவுக்கு ஆசிரியர்களால் நிர்ணயிக்கப்பட்டாலும் பொருத்தமான மாணவருக்கு பொருத்தமான கல்வியைப் போதிப்பதில் உள்ளபொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப் படவில்லை. அது பெற்றோர்கள் பாடசாலைகளின் அதிபர்கள், தற்போதைய அதற்கென நியமிக்கப்படும் அதிகாரிகள் என்போரிலேயே பெரிதும் தங்கியுள்ளது இன்றைய நிலையில் பெற்றோர் யாவர்க்கும் அதுபற்றிய அறிவு அனுபவம் குறைவாக உள்ளதால் அதற்குரிய கூடிய அக்கறை அரசாங்க அதிகாரிகளையே தன்னியக்கமாகச் சாடுகின்றது.

பொருத்தமான கல்வி என்பது ஒவ்வொருவரும் இயல்பான வழியில் அணுகவேண்டிய ஒன்று ஆனால் பொருத்தமான கல்வியை மாணவர்கள் தெரிவு செய்கின்ற பாடச்சேர்க்கை தானாகவே இக்குறிக்கோளை நிறுவுகின்றது மாணவர்களுக்கு பாடங்களை தெரிவு செய்யும் ஆரம்பம் 9ம் தரத்திலேயே அனுமதிக்கப்படுகின்றது.

### வர்த்தகமும் கணக்கியலும்

9-ம் தரத்திலே பாடங்களை மாணவர்கள் தமது எதிர்காலத்தை நோக்கித் தெரிவுசெய்தாலும் பின்னரும் கூட அவர்களின் நடைமுறையில் முக்கியத்துவம் காணப்படுகின்றது. கள் எதிர்காலத்தின் சமுதாயத்தில் தாமாகவே வாழுவதற்கு இத்தகைய வர்த்தக கணக்கியல் ஆரம்ப அறிவு அவசியமானது.

பல்கலைக்கழகத்தெரிவு கிடைக்காத மாணவர்கள் சாதாரண பதவிகளை இலகுவாகப் பெற்றதன் பின் தாமாகக்கடமையில் ஈடுபட்டு உயர் பதவிகளுக்கு பதவிஉயர்வு பெறவோ இப்பாடத்தின் ஆரம்ப அறிவு பெரிதும் உதவியாக அமையும்.

### அத்தியாவசிய நிலைமை

10-ம் வகுப்பில் குறைந்த திறமை பெற்றவர்கள் விஞ்ஞான பிரிவுகள் கிடைக்காத பட்சத்திலேயே வர்த்தகப்பிரிவு மாணவனாகக் கல்வி பயின்று இலகுவாகபல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறக்கூடியதாக இப்பாடத்தினை உள்ளடக்கிய பாடச்சேர்க்கை உருவாக்கும்.

9-ம், 10-ம் வகுப்புக்களில் 'வர்த்தகமும் கணக்கியலும்' பாடத்தை உள்ளடக்கி கல்வி பயின்று 11-ம், 12-ம் வகுப்புக்களில் விஞ்ஞானப் பிரிவு மாணவனாகக் கல்விபயின்று பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும்போது பொறியியல், பௌதீக விஞ்ஞானப் பிரிவுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அப்பட்டப்படிப்பிலும் ஒரிரு அலகுகளுக்கு இதன் அறிவு பெரிதும் பயன்படும். கலைப்பிரிவு மாணவனாகப் பயின்றபோதும் கூடப் பொருளியல் [சிறப்பு] மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டால் இதுபோன்ற பாடத்தை ஒரு பாட அலகாகக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இது காலப்போக்கில் பல பாடங்களின் சிறப்பு நெறிக்

**இ. செல்வநாயகம்**
(தலைவர்-வணிக மாணவர் மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்)

இந்நிலையில் "வர்த்தகமும் கணக்கியலும்" என்ற பாடநெறி மாணவர்கள் தாமாக தமது வற்புறுத்தி தெரிவுசெய்ய வேண்டியஒன்று ஏனைய பல பாடங்களுடன் ஒப்பிட்டுத் தெரிவு செய்ய வேண்டிய பாடமாக இருந்தாலும் அவை எல்லாவற்றிலும் பெரிதும் முதன்மை வாய்ந்த ஒரு பாடநெறியாக இருப்பது உண்மையான ஒன்றுஇப்பாடநெறியை பிரதான பாடங்களுள் ஒன்றாக யாவரும் பயில வேண்டிய ஒன்றாகக் கட்டாயப்படுத்தினாலும் கூட பாதிப்புக்கள் பெரிதாக அமையப்போவதில்லை.

உயர்கல்வியைப் பெறுவோர் பெருப்பாலோராக அமைகின்ற நிலையில் சகல மாணவர்களாலும் இப்பாடத்தைத் தெரிவு செய்வது வரையறை கல்வியிலும் வளமான கல்வி வளத்தை வழிவகுக்கப்பேருதவியாக அமையும் கணிதம் எவ்வாறு ஏனையகல்விப்பாடப் போதனைக்கான அறிவை விரிவுபடுத்தி உதவுகின்றதோ அதே போன்று "வர்த்தகமும் கணக்கியலும்" என்ற இப்பாடம் அடுத்த இடத்தை இக்குறிக்கோள் ரீதியாக ஏற்படுத்துகின்றது கணிதத்துடன் வர்த்தகமும் கணக்கியலும் இணைந்து விட்டால்அதுபற்றிக் குறிப்பிடவேண்டியதில்லை.

சுயநுகர்ச்சி நிலைகடந்த இன்றைய சமுதாயத்தில் வியாபார நடவடிக்கைஎன்பது இன்றியமையாத ஒன்றாக இருந்து அவ்வியாபார நடவடிக்கைகளுக்கான பல துணை நடவடிக்கைகளையும் முக்கியத்துவப்படுத்தியுள்ளது அத்தகைய சமுதாயத்தில் வாழுகின்ற இன்றைய மாணவர்களும் விரிவுபடுத்தப்படும்போது மிகவும் அத்தியாவசியமானதான நிலையை ஏற்படுத்தக்கூடியதாகலாம்.

பல்கலைக்கழகங்களுக்கு இன்றைய நிலையில் கலைப்பிரிவுக்கு ஏராளமானவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் யாவர்க்கும் பல்கலைக்கழகங்களில் சிறப்பு நெறிகள் கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் அநேகர் பொதுக்கலைப் பிரிவுக்கு விரும்பியோ விரும்பாமலோ தெரிவுசெல்லப்படுகின்றனர். இவர்கள் உயர்ந்த பெறுமதியுடன் தமது பட்டத்தைப் பெற்றுச்செல்ல முதலாம் வருடத்தில் 'முகாமைத்துவம்' உட்படப் பாடச்சேர்க்கையைத் தெரிவுசெய்யும்பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் வருடங்களில் முகாமைத்துவம் தொடர்பான பாட அலகுகளைத் தெரிவு செய்து கணக்கியல் பகுதிகளையும் மேலும் கூடுதலாகப் பயிலவும் 'கணக்காளர்' தொடர்பான பயிற்சிகளை இலகுவாக அணுகவும் முடிகின்றது.

இன்றைய நிலையில் தொழில் நுட்பக்கல்லூரிகள் பல வழிகளில் மக்களுக்கு வேலைவாய்ப்பு நிரம்பலுக்கு உதவியாக இருந்துதருகின்றன. நடைமுறை அரசாங்கம் பிற நாட்டு உதவியுடன் தொழில் நுட்பக்கல்லூரிகளை அபிவிருத்திசெய்துவருதல் இக்குறிக்கோளை மேலும் விரிவுபடுத்தும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் விஞ்ஞானப்பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவினருக்கு 'வர்த்தகமும் கணக்கியலும்' பற்றிய அறிவு இருப்பின் பல பாடநெறிகளைத் தெரிவுசெய்யக்கூடியதாக இருக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### ஆமைவேக தந்திகள்

தபால் தந்தி இலாகாவின் ஆமை வேக தந்திகளால் பொதுமக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள். ஆமைவேக தந்தியால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது மாமியாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டதை தெரிவித்தார். சங்கானையிலுள்ள தனது மாமியார் காலமாகி விட்டதாக 29-1-83 சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் பசார் வீதியிலுள்ள உப தபாலகந்தோரிலிருந்து தந்தி யோகபுரத்துக்கு கொடுக்கப்பட்டதாம் இத்தந்தி 1-2-83 செவ்வாய்க்கிழமை பகலே யோகபுரத்திலுள்ள உறவினருக்கு கிடைத்துள்ளது. அவர்கள் மரணச்செய்தி அறிந்த வேகத்தில் 72 மைல்களுக்கு அப்பாலுள்ள யோகபுரத்திலிருந்து சங்கானைக்கு ஓடோடி வந்தபொழுது அங்கு மாமியாரின் உடல் தகனம் செய்து 2 நாட்கள் முடிந்துவிட்டதாக அறிந்தாராம்.

இப்படி எத்தனை பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களோ தெரியவில்லை. இச்சீர்கேடு நீங்க அதிகாரிகள் ஆவன செய்தல் வேண்டும்.

வ. சிவராசா
துணுக்காய்.

ஃ ஃ ஃ

### கிராமோதய சபையிடம் வேண்டுகோள்

மட்டுவில் தெற்கு "மலர் மகள்" சங்கத்திற்கு அருகாமையில் செல்லும் மூன்றும் வட்டாரமான குறுமுனி வீதி இதுவரைகாலமும் போக்குவரத்திற்கேற்ப அமைக்கப்படவில்லை என்பதை மிக மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வீதியால் கோடைகாலத்தில் புழுதியின் நிமித்தம் சைக்கிளில் செல்ல முடியாது மழைகாலத்தில் வெள்ளம் காரணமாக போக்குவரத்து செய்ய முடியாது.

தயவுசெய்து வெகு சீக்கிரத்தில், மேற்படி வீதியைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு, கிராமோதய சபையிடம் விலியுறுத்துகிறோம்.

எஸ். பி. பத்மசீலன்
எஸ். எம். நடராஜா
தென். மட்டுவில்.

# பனை ஆய்வுபற்றிய உலகநிறுவனம் யாழ்ப்பாணத்தில் உருவாகும்?

## 5 நாடுகள் பங்குபற்றும் தொழிற்பாட்டு மாநாடு 21ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் பனை அபிவிருத்தி தொடர்பான தொழிற்பாட்டு மகாநாட்டில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப் படுகிறது. இது தொடர்பான அழைப்புக்கள் பனைவளம் உள்ள நாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் திரு கே. நடராசா தெரிவித்தார்.

இந்தியா, இந்தோனேசியா, பர்மா, தென்ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் பனை வளம் உள்ளதாகவும், இந்தநாடுகளிலிருந்து ஆராச்சியாளர்கள் கலந்து கொண்டால் இந்த மகாநாட்டின் நோக்கம் பூரண வெற்றியைக்கொடுக்கும் என்றும் பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநரும், மகாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவருமான கலாநிதி எஸ். மோகனதாஸ் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து பனம் தும்பு, பனை உணவுகள் பண்டைக்காலத்தில் ஏற்றுமதி செய்யப் பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஐக்கியநாடுகள் உணவு விவசாய அமைப்பின் ஆதரவுடன் நடைபெறவிருக்கும் இந்தத் தொழிற்பாட்டு மகாநாட்டில் இந்த நிறுவனத்தின் தலைமை நிலையம் இயங்கும் ரோம் நகரிலிருந்தும் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள இருப்பதாகவும் கலாநிதி மோகனதாஸ் சொன்னார்.

சபையின் விருப்பத்தின் மீது ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனம் பனை அபிவிருத்தி ஆய்வு தொடர்புகள் சம்பந்தமான இத்தொழிற்பாட்டு மகாநாட்டை இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடத்த முன்வந்தது என்றும் அவர் சொன்னார்.

உயர்வுக்கு ஒருவழிகோலாக கிடைத்துள்ள சந்தர்ப்பமாக அமைகின்றது. என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு கே. நடராசா தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச்சபை அரசினால் ஆரம்பிக்கப்பட்ட பின் தேசிய ரீதியில் நடைபெறும் முதலாவது ஆக்க பூர்வமான நடவடிக்கையாக இம் மகாநாடு இடம் பெறுகின்றது என்றும் அவர் சொன்னார். பனம் பொருட்களைக் கொண்ட உலக ரீதியான தயாரிப்புகளை உருவாக்கவும் சந்தைப் படுத்தவும் இந்தமகாநாடு பயன்படும் என்றும் இந்த மகாநாடு பனை ஆய்வு பற்றிய உலகநிறுவனம் ஒன்றை இலங்கையில் உருவாக்கவும் வழி செய்யலாம் என்றும் திரு நடராசா சொன்னார்.

[வண்.அ]

## கூடிய நெல்விளைச்சல் முரசுமோட்டையிலேயே!

### விவசாயப்பகுதி பெருமிதம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முரசு மோட்டையில் தான் கூடுதலான நெல்விளைச்சல் கிடைக்கிறது. இதற்குக் காரணம் இப்பகுதி விவசாயிகளின் அயராத முயற்சியாகும். இவ்விவசாயிகளின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறு முரசுமோட்டையில் நடைபெற்ற வயல் விழாவிற்கு தலைமைதாங்கி உரையாற்றுகையில் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் செ. ஜெயரத்தினம் குறிப்பிட்டார்.

தொடர்புக்கமக்காரர் எம். கந்தசாமியின் விவசாயப் பண்ணையில் நடைபெற்ற இவ்விழாவில் பெருந்தொகையான விவசாயிகளும் விவசாய உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. ஜெயரத்தினம் மேலும் பேசுகையில் "இப்பகுதிவிவசாயிகள் நெல் உற்பத்தியுடன் நின்று விடாமல் புதுப்புது இனபயிர் வகைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர். இப்பகுதித் தொடர்புக் கமக்காரரான கந்தசாமி விவசாய இலாகாவே அறிமுகம் செய்யாத பல இனப்பயிர்களை நாட்டி ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தி விட்டார். அது மட்டுமல்லாமல் இப்பிரதேசத்தில் அதிக நெல் விளைச்சலும் இவரது கமத்தில் இருந்தே பெறப்பட்டுள்ளது. இதற்காக திரு கந்தசாமியைப் மனதாரப்பாராட்டுவதுடன் வடபகுதி விவசாயிகள் இம்முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்" என்றார்.

கிளிநொச்சி விவசாய அலுவலர் திரு. கே. குமாரசாமி பேசுகையில் அகில இலங்கையிலும் கூடுதல் கோதுமை முரசுமோட்டை தொடர்பு கமக்காரர் கந்தசாமியின் உரியான் கோதுமைப் பண்ணையில் தான் கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாமல் பல இன நெல் வர்க்கமும் முரசுமோட்டையில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு இங்கே பத்து இன நெல் பயிரிடப்பட்டுள்ளது" என்றார்.

தொடர்பு கமக்காரர்களான நா. பராசசிங்கம், ந. செல்லையா ஆகியோரின் வயல் பண்ணைகளையும் விவசாய அதிகாரிகள் பார்வையிட்டுப் பாராட்டும் தெரிவித்தனர்.

(அ)

## தஞ்சாவூரில் பழமையான கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

சென்னை, பெப். 7

தஞ்சாவூரை அடுத்துள்ள பழமையான ஊர் கண்டியூர். அங்குள்ள அரசாப விமோசனப் பெருமான் கோயிலில் திருப்பணி வேலை நடைபெற்று வருகிறது. அங்கு தெற்குப் பிரகாரத்தில் பூமிக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட சிறு சிறு துண்டுக் கற்களில் தொன்மையான கல்வெட்டு எழுத்துக்கள் பல உள்ளன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கல்வெட்டுத்துறையினர் அங்கு சென்று நடத்திய ஆய்வில் பல செய்திகளைப் புதியதாகக் கண்டனர். கண்டியூர்சூழ்ந்த பகுதிக்கு "செம்பியன் கிழார் நாடு" என்ற பெயர் வழங்கியமை மிகத்தொன்மையான எழுத்துள்ள கல்வெட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இந்நாடு இதுவரை வேறுஎந்தக் கல்வெட்டிலும் பயின்று வராத பெயராகும்.

இவ்வளவு தொன்மையான எழுத்து இப்பகுதியில் கிடைப்பது இதுவே முதல்முறையாகும்.

பிற்காலப் பல்லவர், சோழர் காலத்தில் ஆர்க்காட்டுக்கூற்றம், கிழார்க்கூற்றம் என்று அப்பகுதி வழங்கியதற்குமுன் 8, 9ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் அப்பகுதி 'செம்பியன் கிழார் நாடு' என்று வழங்கப்பட்ட தகவல் தெரியவருகிறது.

மற்றொரு கல்வெட்டுத் துண்டில், 'சேந்தன்' என்ற தொன்மையான அரசியல் அலுவலன் பெயர் புதியதாகக் கிடைத்துள்ளது. இராசராசசோழன், இராசேந்திர சோழன் இவர்களின் மெய்க்கீர்த்திப் பகுதிகளும் பொன், கழஞ்சு, மஞ்சாடி, குன்றி முதலிய நாணயப் பெயர்களும், அளவுப் பெயர்களும் சில கல்வெட்டுத் துண்டுகளில் காணப்படுகின்றன.

பல்லவர்கால அழகிய நுட்பமான சிற்ப வேலைப்பாடுமிக்க தூண்களும் சில அங்குள்ளன ஒரு தூணில் தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்றுள்ளது. அதனால் கண்டியூரில் முன்பு சமண சமயம் இருந்தது என்பதும் பெறப்படுகிறது.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் துணையுடன் ஆய்வு நடைபெற்று வருகிறது.

வவனியா அபிவிருத்திச் சபை

## நிறைவேற்றுக் குழுவில் ஐ. தே. க. உறுப்பினர்

(வவனியா)

வவனியா மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக் குழுவில் ஐ. தே. கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையில் அங்கம் வகிக்கும் ஐ-தே- கட்சியின் இரண்டாவது உறுப்பினராகிய திரு. ரி. பரமநாதன் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சனதிபதியுடன் கலந்த சென்ற ஐ-தே- கட்சி அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாகவே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நியமனம் தொடர்பாக உத்தியோக பூர்வமான கடிதத்தினை வவனியா மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலாளர் திரு கே சிலோகேஸ்வரன் திரு ரி பரமநாதனுக்கு அனுப்பிவைத்துள்ளார்,

இதேபோல் மன்னார் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபை நிறைவேற்றுக் குழுக்களிலும் ஐ- தே- கட்சி உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என தெரியவருகின்றது.

[அ]

## உயர் கல்வித் துறையில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களில் கலை, வர்த்தகம், முகாமைத்துவம், விஞ்ஞானப்பட்டம் பெற்றவர்களில் பலர் 'கணக்காளர்' தொடர்பான 'பட்டயக் கணக்காளர்' முகாமைத்துவச் செலவுக் கணக்காளர் போன்ற தொழில் ரீதியான பயிற்சி நெறிகளை இலகுவாக ஆரம்பித்து விரைவாகக் கணக்காளர் நிலைக்கு உயர்ந்து வளர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ப வேதனங்கள் சலுகைகளைப் பெற்று சமுதாயத்தில் உயர் நிலையில் வாழ்ந்துகொள்ள இப்பாடநெறியின் முக்கியம் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்களில் மட்டுமன்றிப் பாடசாலைகளிலும் சமுதாய நோக்கிலும் அண்மையிலே அபிவிருத்தியடைகின்ற இப்பாடத்தை உள்ளடக்கிய 'வணிகமாணி மாணவர்கள் பிறபீடம், துறை போன்ற பல்கலைக்கழக முகாமைப் பிரிவால் அக்கறை, அனுபவம் இன்றி வழிநடத்தப்படுவதிலும் அதேபோன்ற மிகமோசமாகப் பாடசாலைகளிலும் வழி நடத்தப்படுவதையும் அவதானிப்பவர்கள் பலர் இத்தகைய போக்கிற்குக் காரணம் எது எனக் கண்டறிய முடியாதிருக்கின்றனர்.

குறிப்பாக வடபகுதியில் பல பாடசாலைகளில் இக்கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு மேலதிக ஆசிரியர் இருப்பதாக கல்வித்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அதிபர்களோ அன்றி அதிபர்களின் செல்வாக்குள்ள ஆசிரியர்களோ இப்பாடநெறி என்ற ஒன்று இருப்பதாகக் கூற முன்வராததுடன் சிலர் இப்பாடம் மிகவும் கஷ்டமான ஒன்று என மாணவர்களுக்கு அறிவுரை கூறிவருவதுடன் அதே பாடத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை வேறு பாடங்களைப் போதிக்க அனுமதித்துவிட்டுத் தாம் நலமாகக் கடமைபுரிவதை விரும்புகின்றதைப் பொதுமக்களின் அவதானம் கண்டுகொள்ள முடியாமல் இல்லை நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதைப்பொதுமக்கள் கவனித்துக் கவலைப்பட்டுப்பயனில்லை. எனவே எமது தகவல்களுடன் நேரடியான அவதானங்கள் அனுபவங்கள் என்பவற்றின் துணைகொண்டு நல்லதொரு வளமான சமுதாயத்தை பல துறைகளிலும் சம வாய்ப்பினைப் பெறக்கூடிய எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கத் தாமாகவே தம்மை வழிநடத்தக் கல்விச் சமுதாயத்தின் பிரஜைகள் ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிச் செயல்படுதல் வேண்டும்.

## வவனியாவில் வரட்சி

(வவனியா)

வவனியாவில் நீண்டகாலமாக வரட்சி நிலவுவதால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் அறிகுறிகள் தென்படுகின்றது.

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கடந்த 6-ந் திகதி கொழும்பில் இழுக்கப்பட்ட 919-வது தேசிய லொத்தர் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
01 Z 0732
ரூபா 195,560/-

2-வது பரிசு
01 G 0542
ரூபா 73,335/-

3-வது பரிசு
15 V 0599
ரூபா 24,445/-

ரூபா 880-02 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08 | A | 0437 | 12 | A | 0450 |
| 18 | A | 0528 | 19 | A | 0426 |
| 19 | A | 0994 | 01 | B | 0849 |
| 03 | B | 0189 | 08 | B | 0620 |
| 12 | B | 0065 | 12 | B | 0959 |
| 15 | B | 0902 | 20 | B | 0871 |
| 05 | C | 0306 | 12 | C | 0219 |
| 18 | C | 0476 | 03 | D | 0212 |
| 19 | D | 9267 | 19 | D | 0744 |
| 21 | D | 0043 | 02 | E | 0834 |
| 03 | E | 0104 | 04 | E | 0491 |
| 14 | E | 0256 | 17 | E | 0180 |
| 22 | E | 0883 | 12 | L | 0719 |
| 20 | L | 0162 | 01 | M | 0562 |
| 11 | M | 0119 | 14 | M | 0968 |
| 07 | N | 0070 | 18 | N | 0575 |
| 21 | N | 0174 | 03 | O | 0321 |
| 03 | O | 0799 | 05 | O | 0278 |
| 05 | O | 0444 | 19 | O | 0195 |
| 19 | O | 0263 | 03 | P | 0813 |
| 01 | P | 0292 | 11 | P | 0371 |
| 22 | P | 0150 | 03 | Q | 0959 |
| 04 | Q | 0479 | 08 | Q | 0470 |
| 10 | Q | 0094 | 19 | Q | 0378 |
| 06 | R | 0139 | 04 | S | 0779 |
| 03 | F | 0295 | 05 | F | 0507 |
| 07 | F | 0799 | 09 | F | 0640 |
| 17 | F | 0323 | 20 | F | 0948 |
| 22 | F | 0589 | 04 | G | 0247 |
| 12 | G | 0312 | 09 | H | 0894 |
| 13 | H | 0725 | 17 | H | 0916 |
| 09 | J | 0953 | 15 | J | 0696 |
| 19 | J | 0320 | 0? | K | 0421 |
| 05 | K | 0011 | 05 | K | 0069 |
| 05 | K | 0701 | 12 | K | 0673 |
| 14 | K | 0029 | 19 | K | 0444 |
| 06 | L | 0865 | 10 | L | 0562 |
| 10 | L | 0754 | 05 | S | 0359 |
| 08 | S | 0683 | 09 | S | 0788 |
| 13 | S | 0932 | 14 | S | 0491 |
| 09 | T | 0543 | 19 | T | 0116 |
| 20 | T | 0336 | 04 | U | 0348 |
| 09 | U | 0058 | 11 | U | 0158 |
| 14 | V | 0051 | 18 | V | 0028 |
| 21 | V | 0764 | 04 | W | 0028 |
| 05 | X | 0210 | 12 | X | 0255 |
| 12 | X | 0578 | 14 | X | 0012 |
| 14 | X | 0953 | 14 | X | 0981 |
| 17 | X | 0485 | 03 | Y | 0513 |
| 06 | Z | 0333 | 20 | Z | 0383 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

## சிவராத்திரி பற்றிய பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

தைமாத 29 ம் திகதி வெள்ளிக்கிழமையே சிவராத்திரி என்று குறிப்பிட்ட வாக்கிய பஞ்சாங்கத்தினர் தமது சோதிட பரிபாலன சபையின் சார்பில் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

சிவராத்திரி போன்ற விரதங்கள் சூரியனுடைய சஞ்சாரத்தால் கணிக்கப்படும் மாதங்களை கவனிக்காது சந்திரனை மையமாக வைத்துக் கணிக்கப்படும் மாசத்தைப் பின்பற்றியே கொள்ளவேண்டும் என்பதற்குரிய பிரமாணங்களைக் காட்டி தை 29ம் திகதியே சிவராத்திரி என்று எழுதப்பட்டுள்ளது.

தமது பஞ்சாங்கத்தைப் போலவே இந்தியாவிலிருந்து வரும் ஆச்சாரியாள் மடத்துப் பஞ்சாங்கமும் குறித்திருப்பதாகவும் எடுத்து காட்டியுள்ளனர்.

[ப]

# ‘‘யாழ். பல்கலைக்கழகம் முழுமையானதற்கு கைலாசபதியும் ஒரு காரணம்’’

## அஞ்சலிக் கூட்டத்தில் சங்கானை உ. அ. அதிபர் உரை

(சித்தன்கேணி)

‘‘நூல்களுக்கு விமர்சனம் எழுதுவதில் தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டு தமிழையும் கம்யூனிசத்தையும் கலந்து நூல்களை விமர்சிப்பதில் தன்னிகரில்லா புகழ் அடைந்தவர் பேராசிரியர் கைலாசபதி இலங்கையில் இருக்கும் தமிழ் இலக்கிய கர்த்தாக்களுள் இந்தியாவில் நன்மதிப்பை அறிந்தவராகவும் இருந்தவர்கள் இருவர் அவர்களுள் ஒருவர் பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர் கைலாசபதியின் நூல்கள் இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாக கற்பிக்கப்படுகின்றது’’

இவ்வாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் பேராசிரியர் கைலாசபதியின் அஞ்சலிக் கூட்டம் சங்கானை பட்டின சபை நூல்நிலையத்தில் நடைபெற்றபோது தலைமை வகித்துப்பேசும்போது குறிப்பிட்டார்.

அஞ்சலிக்கூட்ட ஆரம்பத்தில் பேராசிரியர் கைலாசபதியின் திருவுருவப்படத்துக்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பேராசிரியர் கைலாசபதிக்கு, ஆசிரியரும் தமிழ் விழா அமைப்பாளர்களில் ஒருவருமான தேவனுக்கும் இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. ஆ. செந்தில்வடிவேல் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது பேராசிரியர் கைலாசபதி கம்யூனிச வாதியாக இருந்தபோதும் தனது கொள்கையை எவரிடமும் கட்டாயமாக புகுத்துவதற்கு எந்தச்சந்தர்ப்பத்திலும் முயற்சிக்கவில்லை. அப்படிப்பட்ட கொள்கைவாதிகளை நாம்காண்பது மிகக்கடினம் பேராசிரியர் கைலாசபதி விரிவுரையை நிகழ்த்தும்போது மாணவர்களுக்கு இலகுவில் விளங்கக் கூடிய முறையில் விரிவுரைகளை நிகழ்த்தி மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர். அன்னார் இலக்கியத்துக்கும், தமிழுக்கும் ஆற்றிய சேவைகள் மக்களிடத்தில் இருந்து என்றும் நீங்கமாட்டாது. யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் ஆரம்பத்தில் தமிழ் இந்து நாகரிகம் பொருளியல் ஆகியபாடங்களை மட்டும்தான் விரிவுரை நிகழ்த்த அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டது. இன்று முழுமையான பல்கலைக்கழகமாக விளங்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்தவர்களுள் பேராசிரியர் கைலாசபதியும் ஒருவர்.

சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தனதுரையில் பேராசிரியர் கைலாசபதி இலக்கியத்துறைக்கு பலவழிகளிலும் தொண்டாற்றி எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியிருக்கின்றார். நூல்களுக்கு விமர்சனம் எழுதி எழுத்தாளர்களுடைய நூல்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்திருக்கின்றார். நூல்களுக்கு இவருடைய அணிந்துரையை பெற்று வெளியிடுவதற்கு இந்தியாவிலுள்ள எழுத்தாளர்களே முன்வந்து அணிந்துரையை பெற்று நூல்களை வெளியிட்டுள்ளார்கள் இவருடைய இலக்கிய ஆற்றல் எப்படிப்பட்டது என்பதை நான் கூறவேண்டிய அவசியமில்லை. அன்னாருடைய இழப்பு இலக்கியத்துறைக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

அதிபர் திரு. க. அருணாசலம் அதிபர் திரு. பொ. சிவகுரு. சங்கானை கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. வை. செந்தில்நாதன் ஆசிரியர் திரு. சிவசண்முகமூர்த்தி சங்கானை உதவி நூலகர் திரு. சி. மா. கணேசன் உட்பட இன்னும் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

இறுதியில் பேராசிரியர் கைலாசபதியின் குடும்பத்தினருக்கு சங்கானை மக்களின் சார்பில் அனுதாபத்தை கடித மூலம் தெரிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

---

# கைதடி விக்னேஸ்வராவில் 9ம், 10ம் வகுப்புகளுக்கு தற்காலிக அனுமதி

(சுண்டிக்குளி)

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் ரத்து செய்யப்பட்ட க. பொ. த. (சாதாரண)ப் பரீட்சை வகுப்புகள் மீண்டும் நடத்துவதற்கு தற்காலிகமான அனுமதியை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது

அண்மையில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 9–ம், 10–ம் வகுப்புகளை ரத்து செய்தும், வித்தியாலயத்தை தரம் குறைத்தும் கல்வி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையைஎதிர்த்துவித்தியாலய மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்ததைத் தெரிந்ததே, இவ்வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் கல்வி அமைச்சின் நடவடிக்கைக்குத் தமது அதிருப்தியை தெரிவித்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்

சாவகச்சேரி எம், பி. திரு. வி. என். நவரத்தினத்திடம் இவ்வித்தியாலயம் தொடர்பாகத் தெரிவித்த கோரிக்கையை அடுத்து எம். பி. கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு ரத்துச்செய்யப்பட்ட 9–ம், 10–ம் வகுப்புகளை பாடசாலையில் மீண்டும் தொடர அனுமதி கோரியதை அடுத்தே கல்வி அமைச்சு தற்காலிகமாக இவ்வகுப்புகளை நடாத்த அனுமதி வழங்கியுள்ளது.

எம். பியின் நடவடிக்கைகளுக்குப்பாராட்டுத்தெரிவித்துள்ள விக்னேஸ்வரா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பெற்றோர்களும் சகல வசதிகளும் உள்ள இவ்வித்தியாலயத்தினை தரம் உயர்த்துவதிலும் தற்காலிக அனுமதியை நிரந்தரமாக்கவும் எம். பி. நவரத்தினம் நடவடிக்கை எடுப்பார் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ)

---

## மன்னாரில் தேசியக்கொடிகள்

(மன்னார்)

மன்னாரிலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களும் சுதந்திர தினத்தன்று மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மன்னார் மாவட்டத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

---

## ‘அந்தாதிப்பாடலும் உறிக்காட்சியும்’

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது. அபிராமிப்பட்டர் தை அமாவாசை அன்று அந்தாதிபாடி அம்பிகை அருள் பெற்றதைக் குறிக்கும் வகையில் இவ்விழாவில் மாலை 4மணிக்கு ‘உறிக்காட்சியும் அந்தாதிப்பாடலும்’ என்ற நிகழ்ச்சி நடைபெறுவது சிறப்பம்சமாகும். இரவு அம்பாள் வீதி உலாவருதலும் நிகழும். [ப]

---

# ஐக்கியநாணய சங்கங்களின் தனியான வங்கிச் சேவை மார்ச்சில் ஆரம்பமாகும்!

(பண்டத்தரிப்பு)

‘‘யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜம் யாழ் மாவட்டத்தில் இயங்கி வரும் ஐக்கிய நாணய சங்கங்களின் நலன் கருதி சிறு சிறு சேமிப்புகளை ஊக்குவிக்கவும், தேவை ஏற்படும் போது கடனுதவி வழங்க தனியானதொரு வங்கிச் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இப்புதிய வங்கிச் சேவை மார்ச் மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது’’

இவ்வாறு யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஐக்கிய நாணயசங்கங்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்குக்கு சமாஜ இயக்குநர் திரு. வி. மூர்த்தி தலைமை வகித்தார்.

திரு. ஞானப்பிரகாசம் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது: ‘‘கடந்த அரசின் பதவிக்காலத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் கிராமிய மட்டத்தில் நல்ல முறையில் இயங்கி வந்த ஐக்கிய நாணய சங்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தற்போதைய அரசு பதவிக்கு வந்ததும் புதிதாக பதவி ஏற்ற கூட்டுறவு ஆணையாளர் திரு. ஒஸ்ரின் பெர்னாண்டோ வழங்கிய பணிப்புரையின் பேரில் அழிந்து போகும் நிலையிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களை புனரமைக்கவும். புதிய சங்கங்களை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள 22 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை ஐக்கிய நாணய சங்கங்களில் உறுப்பினராக்கியும், கூட்டுறவு மகளிர் குழுக்களை தனித்தனி சங்கங்களாக்கியும் எமது யாழ் மாவட்ட ஐக்கியநாணய சங்கங்களின் சமாஜத்தில் இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த சமாஜத்திற்கு அவுஸ்திரேலியா நாட்டின் நிறுவனம் ஒன்று நிதி உதவியளிக்கவும் முன்வந்துள்ளது. இந்த நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் அதை கிளைகள் மூலமாக சங்க உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது’’

திரு. ஞானப்பிரகாசம் தொடர்ந்து உரையாற்றுகையில் தற்போது மக்கள் வங்கி மூலம் மட்டுப்படுத்தப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களுக்கு அவற்றின் சேமிப்பிலிருந்து மூன்று மடங்கு பணமும், மட்டுப்படுத்தப்படாத ஐ. நா. சங்கங்களுக்கு அவற்றின் சேமிப்பிலிருந்து ஐந்து மடங்கு பணமும் கடனுதவியாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. எஸ் பாலசுந்தரம், யாழ். தேசிய கூட்டுறவுச் சபை விரிவுரையாளர் திரு அ. ம. யேசுராசா, சமாஜ நிர்வாக செயலாளர் செல்வி எம். எம். ரஜனி ஆகியோரும் கலந்து கொண்டனர். சமாஜ வலி தென் மேற்குப் பிரிவு செயற்குழு உறுப்பினரும், மாதகல் யாதப்பை ஐக்கிய நாணய சங்கத் தலைவருமான திரு. சி. நடராஜா நன்றி கூறினார். (க)

---

# முல்லைத்தீவில் நடைபெற்ற கைப்பணிப் பொருட்காட்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட கைப்பணிப் பொருட்காட்சியை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் திறந்துவைத்தார் தேசிய இளைஞர்சேவை மன்ற முல்லைத்தீவு மாவட்ட அலுவலர் திரு. எஸ். ஆறுமுகம் தலைமையில் நடந்த இக்கண்காட்சித் திறப்பு விழாவை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சிங்காரவேல், முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எஸ். கமலேஸ்வரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இம்மாவட்ட இளைஞர் சேவைமன்றப் பயிற்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தையல் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பனை உற்பத்திப் பொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றன. இப்பகுதிப் பொதுமக்களும், இளைஞர்மன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிபர்களும் இக்காட்சியில் தாராளமாகக் கலந்துகொண்டனர்

பனை அபிவிருத்திச்சபையின் முல்லை மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் திரு. கே. ஏ. அற்புதராசா, சபை இயக்குநர் திரு. ஏ, மாணிக்கம், அலுவலக உதவியாளர் திரு. க, சிவராசா, விற்பனை உத்தியோகத்தர் திரு. எஸ். புவனேஸ்வரமூர்த்தி, போதனாசிரியர்கள் திருமதி இ. சண்முகநாதன், திருமதி ம. பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வண். —அ)

---

## கி. மு. சங்கங்கள் புனரமைப்பு

(சித்தன்கேணி)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கால எல்லை முடிவடைந்த பின்பும் புனரமைக்கப் படாத கிராம முன்னேற்றச் சங்கங்களை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். வி ஜெயக்குமாரும், உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு க. சிவகுமாரும் மேற்கொண்டுள்ளனர். [க]

---

## பாலஸ்தாபனம்

(சுழிபுரம்)

சித்தங்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. விரைவாகத் திருத்த வேலைகள் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

---

# தேசிய தொழிற்பயிற்சித் திட்டத்தில் இளைஞர் தெரிவு

(சித்தங்கேணி)

கிராமமட்டத்தில் தேசிய தொழிற் பயிற்சித்திட்டத்தில் பயிலுனர்களை பயிற்றுவிப்பதற்கு தேசிய தொழிற்பயிற்சிச்சபை ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக தேசியதொழிற் பயிற்சிசபை வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேலுடன் தொடர்பு கொண்டதை அடுத்து உதவி அரசாங்க அதிபர் இப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

கிராமங்கள் தோறும் உள்ள தனியார் நிறுவனங்களைத் தெரிவு செய்து பயிற்சியாளர்களையும் தெரிவு செய்து தேசிய தொழிற்பயிற்சிச் சபையினருக்கு அனுப்புவதற்குரிய வேலைகளை விசேட சேவை உத்தியோகத்தர்களிடமும், கிராமசேவை அலுவலர்களிடமும் ஒப்படைத்துள்ள உதவி அரசாங்க அதிபர் இம்மாதம் முடிவடைவதற்குள் தெரிவு செய்து தருமாறு கேட்டுள்ளார்

பயிற்சியாளருக்கு பயிற்றப்படும் காலங்களில் அலவன்சாக மாதம் தோறும் முந்நூறு ரூபாவை தேசிய தொழிற் பயிற்சிச்சபை வழங்கும்.

அச்சுக்கூடத் தொழில் மேசன், தச்சுத்தொழில், சைக்கிள், கார், மோட்டார் சைக்கிள் திருத்துதல், வானொலி பழுதுபார்த்தல், ஆபரணங்கள் தயாரித்தல், வர்ணம் தீட்டுதல், ஆகிய துறைகளிலேயே 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களைத் தெரிவு செய்து பயிற்றுவிப்பதற்கு தேசிய தொழிற்பயிற்சிச்சபை திட்டமிட்டுள்ளது.

பெண்களுக்கான தையல் பயிற்சியையும் பயிற்றுவிப்பதற்கு பெண்களைத் தெரிவு செய்ய இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## அச்சுவேலியில் மண்ணெண்ணெய் நிலையம்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதிப் பாவனையாளர்களின் வசதியை முன்னிட்டு இரண்டாவது மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம் ஒன்றை இம்மாதம் திறக்கவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை இச்சங்கத்தின் புதிய இயக்குநர் சபை எடுத்துள்ளது. இச்சங்கத்திற்கு முன்பாக இந்த நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் திரு தி. கமலநாதன் தெரிவித்தார்.

இப்பகுதி விவசாயிகளின் நலனை முன்னிட்டு எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை இப்பகுதியில் திறப்பதற்கும் இச்சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் சொன்னார். [வண்—அ]

# "மூலவளங்களைப் பயன்படுத்தாத நாடு முன்னேற முடியாது"

[யாழ்ப்பாணம்]

"தனது நாட்டிலுள்ள மூல வளங்களை மனிதசக்தியைப் பயன்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் காணாத எந்த நாடும் பொருளாதார ரீதியில் தன்னிறைவு கண்டதாக இல்லை. எமது நாட்டு மக்கள் காலாகாலமாகப் பயன் படுத்தி வந்த மூலவளங்களை இன்றைய எமது தேவைகளுக்கு நாம் பயன்படுத்துவோமாகில் ஏனைய கைத்தொழில் நாடுகளைப் போல நமது நாடும் உயரமுடியும்"

இவ்வாறு தீவுப்பகுதிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா மண்டைதீவில் பனம் பொருள்உற்பத்தி கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார். மண்டைதீவ கிராமோதயசபையின் தலைவர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமையில் நடந்த இக்கண்காட்சி மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்தது.

பனைஅபிவிருத்திச் சபையின் மண்டைதீவுப் பயிற்சிநிலையத்தின் உதவியுடன் மண்டைதீவுக் கிராமோதய சபையினால் நடத்தப்பட்ட இக்கண்காட்சியில் உதவி அரசாங்க அதிபர் திரு. நாகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது நாடு அன்னியர்களால் ஆளப்பட்டகாலத்தில் நாம் அரச உத்தியோக மோகத்தில் மூழ்கியிருந்ததால் எமது கிராம மட்டத்திலான மூலவளங்களைப்பயன் படுத்தத் தவறி விட்டோம். இதனால் எமது மக்கள் சுயதொழிலில் தம்மை விரிவுபடுத்த முடியாத நிலை உருவாகியது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் நாம் எமது நாட்டின் மூலவளங்களைப் பயன்படுத்தி எமது சுய முயற்சிகளுக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

"எமது நாட்டு மூலவயங்களில் ஒன்றான பனைமரத்தின் நுனியிலிருந்து அடிவேர்வரை ஆயிரத்துக்குமதிகமான பயன்களை நாம் பெறமுடியும். எமது சுதேசியப் பொருட்கள் மீது எமக்குப்பற்று ஏற்படாவிட்டால் நாம் எமது நாட்டில் பற்று அற்றவர்களாகவே கருதப்படுவோம்.

சில இடங்களில் பனம் பொருள் உற்பத்தி பொழுது போக்காகச் செய்யப்படுகின்றது. ஆனால் இன்று இதைக் குடிசைக் கைத்தொழிலாகவும் கைத்தொழிலாகவும் எமது நாட்டுப் பெண்கள் பயன் படுத்தும் வகையில் பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கைகளை விஸ்தரித்துவருவது பாராட்டுக்குரியதாகும்"

பனை அபிவிருத்திச்சபையின் உதவிஉற்பத்தி உத்தியோகத்தர் திரு. வி. ஜி. தங்கவேல் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் "பனை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கையில் பயிற்சி நிலையங்களை இயக்குவதும் முக்கியமான பிரிவாகும். பயிற்சி நிலையங்களின் மூலம் பனம் பொருளின் சிறப்புக்களையும் உற்பத்திகளையும் மக்கள் பரவலாக அறிவதற்கும் உற்பத்திப் பொருட்களைப் பாவிப்பதற்கும் வசதியேற்படுவதுடன் புதிய உற்பத்தியாளர்கள் உருவாக்கவும் முடிகிறது. உற்பத்தி அதிகரிப்புக்கும் பாவனையாளர் அதிகரிப்புக்கும் வழியேற்படுகிறது. பயிற்சி நிலையங்களிலும் உற்பத்தி நிலையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்யவும் விற்பனவு செய்யவும் எமது விற்பனைப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது" என்றார்.

இக்கண்காட்சியில் மண்டைதீவு பனம் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த இருபது பயிற்சியாளர்கள் தமது உற்பத்திகளைக் காட்சிக்கு வைத்திருந்தனர். பனை அபிவிருத்திசபையின் பல்வேறு உற்பத்திப் பொருட்களும் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. பனை அபிவிருத்திச் சபையின் போதனாசிரியைகள் செல்வி ம. சுந்தையா, திருமதி ம. பாலசிங்கம் ஆகியோர் இக்கண்காட்சி மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றினர்.

இப்பயிற்சி நிலையத்தில் ஆறு மாதகாலப் பயிற்சி பெற்றவர்களில் ஏழுபேர்'ஏ' பிரிவுபயிற்சியாளர்களாகவும், நான்கு பேர் 'பீ' பிரிவு பயிற்சியாளர்களாகவும் தெரியப்பட்டனர். இவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இக்கண்காட்சி தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் விசேடசேவை அலுவலர் திரு. கே. சிவகுலசிங்கம், கிராமோதய சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் செ. அ. தேவராசா, சி. பாலசிங்கம், கு. க. நடராசா, எஸ். ஏ. கிறீபத்பராசா, அ. ஜெயகுணதிலகம், சா. ஜெயரத்தினம், வீ.சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். [வண்.அ]

## கிளிநொச்சி செய்திகள்

கே. வி. திருலோகமூர்த்தி

### சமயதீட்சை

ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தில் நூற்றுவரைக் காளேருக்குச் சமயதீட்சை அளிக்கப்பட்டது. அருட்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சங்கீத பூஷணம் ரி. பகவதியின் இன்னிசைக் கச்சேரியும், பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன.

### காந்தீயத்தின் புதிய பாலர்பாடசாலைகள்

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள சங்கத்தார்வயல், கோவில் வயல், ஊர்வணிகன் பற்று ஆகிய பகுதிகளில் கடந்த 4ம்திகதி காந்தீய இயக்கத்தினரால் சிறுவர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. காந்தீய அமைப்புச் செயலாளர் திரு. ப. வை ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவங்களில் விசேடசேவை அலுவலர்கள் திரு. இ. தியாகராசா, திரு. க. பத்மநாதன், கிராமோதயசபைத் தலைவர் திரு. க. ஆ. விநாயகமூர்த்தி, ஆசிரியை செல்வி கமலா முருகேசு ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

### ரூ.6 லட்சம் செலவில் முருகனுக்குத்தேர்

கிளிநொச்சிநகர அருள்மிகு முருகன் ஆலயத்திற்குச் சுமார் ஆறு லட்சரூபா செலவில் புதியசித்திரத்தேர் ஒன்று உருவாகி வருகிறது. இதற்கென நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. கே.குமாரசாமி தலைமையில் தேர்த்திருப் பணிச்சபை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

### உமையாள்புரத்தில் இப்படி ஒரு பாடசாலை

உமையாள்புரம் அரசினர் பாடசாலை கடந்த ஐந்து வருடங்களாக ஒரு ஆசிரியருடனேயே இயங்கி வருகிறது. இவரே அதிபராகவும் செயற்படுகிறார். இவ்வாசிரியர் லீவில் சென்றால் பாடசாலையும் மூடப்பட்டுவிடும். ஐந்து வகுப்புகள் உள்ள இப்பாடசாலையில் கிணறும் இல்லை. மலசலகூட வசதியும் கிடையாது. இதனால் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### கட்டாக்காலி இடையூறு

கிளிநொச்சிப் புகையிரத நிலையத்தில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளது புகையிரத மேடைகளை இவை அசுத்தப்படுவதுடன் பிரயாணிகளுக்கும் இடையூறு விளைவிக்கின்றன.

### அணைக்கட்டு திருத்தம்

கடந்தஆண்டு இடம்பெற்ற வெள்ளப் பெருக்கின்போது உடைப்பெடுத்த முறிப்புக் குள அணைக்கட்டுகள் திருத்தம் செய்யப்படுகின்றன. இக்குளம் உடைப்பெடுத்த போது பலகிராமங்கள் சேதத்திற்காளானது குறிப்பிடத்தக்கது.

### கண்டாவளை ம. வி. க்கு தொலைக்காட்சிப் பெட்டி

கண்டாவளை மகாவித்தியாலயத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் வைபவம் அதிபர் சு. தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொலைக்காட்சிப் பெட்டியை அதிபரிடம் வழங்கினார். சமூக சேவையாளர் திரு. இ கிருஷ்ணராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்

### கல்விப் பணிப்பாளர் திடீர் விஜயம்

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பல பாடசாலைகளுக்கு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை திடீர் விஜயம் செய்தார். ஆசிரியர், மாணவர் வரவு மற்றும் பாடசாலையின் செயற்பாடுகள் பற்றிக் கண்டறிந்த கல்விப் பணிப்பாளர் இப்பகுதிப்பாடசாலைகளின் அபிவிருத்தியில் தாம் பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### பால் பதனிடும் தொழிற்சாலை

கிளிநொச்சியில் உருவாகி வரும் பால் பதனிடும்தொழிற்சாலைக் கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன. விரைவில் தொழிற்சாலையை ஆரம்பித்து வைப்பதற்கென அமைச்சர் திரு சௌ. தொண்டமான் கிளிநொச்சிக்குவருகை தரவிருப்பதாகவும் சொல்லப் பட்டது.

### கிறிஸ்தவ மகாநாடு

யாழ்.நகர் வை. எம், சி, ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ மகாநாட்டில் கிளிநொச்சியில் இருந்து கிறிஸ்தவ இலை நிர்வாகி போதகர் எஸ், ஜோனும், பரந்தன்ஜெப ஆலயபோதகர்எஸ். சந்தணப்பிள்ளையும் கலந்து கொண்டார்கள். கடந்த 3-ம் திகதி ஆரம்பமாகி 5-ம் திகதி முடிவடைந்த இம் மகாநாட்டில் கிறிஸ்தவ இயக்கங்களிடையே நல்லுறவைப்பேணுவதெனவும் முடிவு செய்யபபட்டது. போதகர் வி. ஜே.ஜெயரத்தினம் தலைமையில் இம் மகாநாடு நடைபெற்றது.

### சந்தையில் தரகர் தொல்லை

கிளிநொச்சிச் சந்தையில் தரகர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் பெரிதும் பாதிப்படைந்துவருகின்றனர். தென்னிலங்கையில் இருந்து இங்கு வரும் வர்த்தகர்களும் பாதிப்படைவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. [அ]

## கந்தரனுபூதி உரை மறு பிரசுரமாகிறது

(சுழிபுரம்)

சுழிபுரம் யோகி.கா,கார்த்திகேசு எழுதிய கந்தரனுபூதி உரைநூல் மீண்டும் மறுபதிப்புச்செய்யப்படவுள்ளது. வழக்கம்பரை பஜனைச் சபையினர் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளனர். முன்னர் அச்சிடப்பட்ட பதினையாயிரம் பிரதிகளும் விற்பனையாகி விட்டனவாம். பஜனைச்சபையினர் வருடா வருடம் கந்தரனுபூதிப் போட்டி நடாத்தி பரிசுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [அ)

ரீகல் (யாழ். நகர்)
கடைசி
சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
10-2-83 வரை
எம் ஜி ஆர் - விஜயா
நல்லநேரம்

ராஜேஸ்வரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திர முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி
சாவித்திரி நடித்த
மாயா பஜார்

சாந்தி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள் - 6 — 8
FRED WILLIAMSON
THE SOUL OF NIGGER CHARLEY
SCOPE! COLOR! ACTION

யாழ். நகரில் இதுவே கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
* சிவாஜி * வாணிஸ்ரீ * பாலாஜி * நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00,9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
நடித்த
பாதாள பைரவி
மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள், காதல் காட்சிகளை வெண்திரையில் காணத்தவறாதீர்கள்.
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

# பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து வாஜ்பாய் ராஜினமா!

புதுடில்லி, பெப். 7 இந்தியாவில் பாரதீய ஜனதாக்கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து திரு. ஏ. பி. வாஜ்பாய் ராஜினமாச்செய்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் இவரின்கட்சி தோல்வியடைந்ததையடுத்தே அதற்கான பொறுப்பை ஏற்று ராஜினமாச் செய்வதாக திரு. வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி மாநகரசபைத் தேர்தல்களில் பாரதீய ஜனதா கட்சிக்கு 32 இடங்களும், மாநகர கூட்டுத்தாபனத் தேர்தல்களில் 16 இடங்களும் கிடைத்திருந்தது.

இத்தேர்தல்களில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி அமோக வெற்றியீட்டியிருந்தது. [வெ]

## தடுப்புக்காவலில் இருந்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் 5 (அ) 1 பிரிவின் கீழும் அதே சட்டத்தின் 5 (ஆ) பிரிவின் கீழும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஐவர்மீதான வழக்கின் முதல் குற்றச்சாட்டில் 1981 அக்டோபர் 27ம் திகதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்களுக்குப் புகலிடம் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களை வெளியிடாமல் வைத்திருந்ததுடன் பொலிசாருக்கு இத்தகவலை அறிவிக்கவும் தவறியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மூன்றுவது குற்றச்சாட்டாக மேற்படி சந்தேக நபர்களின் நடமாட்டம் - இருக்குமிடம் பற்றிய தகவல்களை வெளியிடாமல் இருந்ததுடன் பொலிசாருக்கு அத்தகவலை அறிவிக்கத் தவறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐவர் மீதான வழக்கு முதலில் எடுக்கப்பட்டு குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த வழக்கின் முதல் சந்தேக நபரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சாம் ஜே. சி கதிர்காமருடன் சட்டத்தரணிகள் அலெக்ஸ் ரீவூட் மணிவாசகம், கே. தேவ்ராஜா, வி. யோகேஸ்வரன், எஸ். சி. சந்திரகாசன், எஸ். உருத்திரமூர்த்தி. ஆர். சிறினிவாசன், ஐ எஸ். சேவியர் ஆகியோர் எஸ் வி. விவேகானந்தனின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தனர்

2ம், 3ம் எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பி. பாலாதம்புவுடன் டபிள்யு. எஸ் மகேந்திரன், கே. பி. அரவிந்தன். ஏ கிருபைதாசன், ஆர் செல்வஸ்கந்தன் ஆகியோர் ஆஜராகினர். 4ம், 5ம் எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பாலாதம்புவுடன் ஜி. குமாரலிங்கம், எஸ் சி. சந்திரகாசன், எஸ். உருத்திரமூர்த்தி, ஆர். சிறினிவாசன், ஐ. எஸ் சேவியர் ஆகியோர் ஆஜரானுர்கள்.

அரசதரப்பில் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் திலக்மாரப்பனவுடன் அசோகா டி சில்வா, காந்திலால் குமாரசிறி, மோகான் பீரீஸ் ஆகியோர் ஆஜரானுர்கள்.

வழக்கு விசாரணையை மிக விரைவில் முடித்துவிடவேண்டும் என்று திரு. பாலாதம்பு நீதவானிடம் கேட்டுக்கொண்டார். அரசதரப்பில் இதற்கு ஆட்சேபனையுண்டா என்று நீதவான் கேட்டார். இதற்கு பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் 'இவர்கள் விரைவில் தண்டிக்கப்படவேண்டும்என்றே விரும்புகிறேன்' என்றார்.

திரு பாலாதம்புகுறுக்கிட்டு இவர்கள் ஏற்கனவே முகாம்களிலும் சிறைகளிலும் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள், இவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதுபற்றி நாம் நீதிமன்றத்தில் அம்பலப்படுத்துவோம் என்றார்.

சந்தேகநரர்பர்களை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு ஜூன் 6ம் திகதி வழக்கு விசாரிக்கப்படும் என்றும் நீதவான் அறிவித்தார்.

இக்கைதிகள் இன்றுபின்னேரமே வேறு இடத்துக்கு மாற்றப்படக்கூடும் என்றும்அப்படி செய்வதாயின் நீதிமன்றத்துக்கும் சட்டத்தரணிகளுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்று திரு. பாலாதம்புகேட்டுக்கொண்டார். றிமாண்ட் சிறையிலுள்ள கைதிகள் மாற்றப்பட்டால் சட்டத்தரணிகளுக்குஅறிவிக்கப்படவேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

அடுத்த வழக்கில் முதலாம் சந்தேக நபரின் சார்பில் முதலில் எடுக்கப்பட்ட வழக்கில் அவருக்காக ஆஜராகும் அதே சட்டத்தரணிகள் குழுவும் இரண்டாவது சந்தேகநபரின் சார்பில்சிரேஷ்டசட்டத்தரணி திரு எம். சிவசிதம்பரத்துடன் மணிவாசகம்அலெக்ஸ் ரீவூட், கே. தேவராஜா, ஆர். சிறினிவாசன், ஜி. குமாரலிங்கம், வி. யோகேஸ்வரன், எஸ். உருத்திரமூர்த்தி, ஐ. எஸ். சேவியர் ஆகியோர்ஆஜரானுர்கள்.

வழக்கு விசாரணைகளை விரைவில் முடிக்கவேண்டும் என்று சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டார்.

கைதிகளின் உறவினர்கள் அவர்களுடன் உரையாடுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்றும் அவர் நீதவானிடம் கேட்டுக்கொண்டார். பாதுகாப்புகாரணமாக அப்படி செய்வது உசிதமல்லவென்று நீதவான் அறிவித்தார்.

## கொலைசெய்வதாக மிரட்டினராம் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின் முல்லைத்தீவில் ஐ. தே. கட்சியில் போட்டியிட்ட ஆசிரியரான திரு. சந்திரபாலன் என்பவர் கொலை பயமுறுத்தல் செய்யப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருவராத்தில் ஐ. தே. கட்சியிலிருந்து விலகிவிடவேண்டும் இல்லையேல் வவனியாப் பகுதி ஐ. தே. கட்சி அமைப்பாளர் கொலை செய்யப்பட்டது போன்று உம்மையும் கொலை செய்வோம் எனப் பாலேந்திரன் பெத்தியான் ஆகிய இரு இளைஞர்கள் சந்திரபாலனைப் பயமுறுத்தினர்கள் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் திரு. சந்திரபாலன் முல்லைத்தீவுப் பொலிசில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்' (அ)

## உண்ணுவிரதத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் மாணவர் அவைச் செயலாளர் திரு க. செல்வராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், வண. பிதா போல் நட்சத்திரம். வண. பிதா ஜெராகட் லெம்பேர்ட், அ. இ. பல்கலைக்கழக மாணவர் அனைநடவடிக்கைக் குழு உறுப்பினர் திரு. ம. ஜெயக்குமாரன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

### இன்று விரிவுரைகளுக்கு திரும்புவர்

இன்று செவ்வாய்க்கிழமை காலை சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள்விரிவுரைகளுக்குத் திரும்புவர்.

நேற்றுத்தினம் யாழ். பல்கலைக்கழக வேந்தரும், உபவேந்தரும் மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசாவை அழைத்து உண்ணுவிரதம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்தியபொழுது கைதுசெய்யப்பட்ட மாணவர்களை இரு வாரத்துக்குள் விடுதலை செய்வதற்கு அவகாசம் தரும்படியும், உண்ணுவிரதத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்பும்படியும் கேட்டுக்கொண்டது தெரிந்ததே.

நேற்றுக்காலை யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை செயற்குழு,மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில்கூடி நீண்டநேரம் ஆலோசனை நடத்தியபின்னர் தலைவர்பின்வரும்அறிக்கையை வெளியிட்டுள்ளார்,

### தொகுதிகளில் உண்ணுவிரதம்

''தமிழ் பேசும் இனத்துக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளை இல்லாமல்செய்யவும் - மனித உரிமைகளை நிலை நாட்டவும் சாத்வீக ரீதியான தொடர்ச்சியான உண்ணுவிரதப்போராட்டம் தொகுதி தொகுதியாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

''குறித்த ஒரு தொகுதி தெரிவு செய்யப்பட்டு அங்கு மாணவர்கள், பெண்கள், இளைஞர்கள், தொழிலாளர், விவசாயிகள் அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்று சேர்ந்து போராட்ட நடவடிக்கைகளை வெகுஜன ரீதியில் மேற்கொள்ள கிராமம் கிராமமாக பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் சென்று மக்களுக்கு விளக்கப்படுத்தவுள்ளனர்.

''எந்தவொரு விசாரணையுமற்று சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

''பயங்கரவாத தடைச்சட்டம் ரத்து செய்யப்பட்டு சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்படவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடத்தப்படும் விசாரணைகளை தமிழினம் ஏற்கவில்லை என்பதை வெளிக்கொணர பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்துச் செய்யப்படும் வரை போராட்டத்தைத்தொடர்ந்துநடாத்துவோம்.

''இதுதொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சென்று கொண்டே மேற்கொள்வர்.'' [மா]

## பொலிஸ்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கம் பொலிஸில் ஒப்படைத்திருந்தது தெரிந்ததே.

இருவரையும் பொலிசார் விசாரணைசெய்தபோது, உடுவிலைச் சேர்ந்த சந்தேகநபரே தங்களுக்கு குறிப்பிட்ட துப்பாக்கியைத் தந்ததாகத்தெரிவித்தனர்.

சுன்னுகம் பொலிஸ் சார்ஜன்ட் எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் பொலிசார் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் விசாரணை செய்துவருகின்றனர். [மா]

## கொள்ளையடிக்கப்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாங்சாரதி இரவு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொன் சுருனேந்திரன் தலைமையில் பொலிஸ்கோஷ்டி விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அடம்பனில் பொலிஸார் வானை அனுதரவான நிலையில் கண்டுபிடித்தனர். (க]

## சித்திரவதை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லது பிணையில் விடுவிக்கவேண்டும்'' என்று அவர் ஜனுதிபதியைக் கேட்டுள்ளார்.

தமக்கு வெளியிலிருந்து உணவு பெற்றுக்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்றும், பத்திரிகைகள் படிக்கவும், வானெலி கேட்கவும் இருந்துவரும் தடையைநீக்கவேண்டும் என்றும், ஆயர், மூத்தமதகுருமார், மற்றும் கத்தோலிக்க மக்கள் தம்மைவந்து பார்ப்பதற்கு உள்ள தடையை நீக்க வேண்டும் என்றும் வண. பிதா சிங்கராயர் கோரியிருக்கிறார். கடந்த மாதம் 31ம் திகதி சிறை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட இக்கடிதம் பொலிஸ் மா அதிபர் மூலம் ஜனுதிபதிக்குக் கையளிக்கப்பட்டுள்ளதாகத்தெரிகின்றது. [இ]

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் பத்மனுதன்

### இருபாலை

இளைப்பாறிய விற்பனைத் திணைக்கள முகாமையாளர் துரைசிங்கம் பத்மனுதன் காலமானுர். இவர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் பொன்னம்மை [தேவி] அவர்களின் அன்புக் கணவரும், குழந்தைவேல் (Cyntex Knitters, Ekala), சுமதி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இராசபூபதி அருணுசலம் [சாவகச்சேரி], திருமதி சிரோன்மணி நவரத்தினராசா [நல்லூர்], காலஞ்சென்ற திருமதி சிவானந்தசோதி பாலச்சந்திரன் [நல்லூர்], சடாட்சரம் [நவாலி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி நாகபூசனி குமாரசாமி, பார்ப்பதி அம்மை, யோகேந்திரன், யோகாம்பிகை [அம்பிகை], திருமதி சிவயோகநாயகி (சிவா). இராமநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மட்டுவில் சிவன்கோவில் தர்மகர்த்தா தில்லையர் குழந்தைவேலு துரைசிங்கம் அவர்களின் மகனும், காலஞ்சென்ற நந்தவனக் கடவை கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா திக்கம் செல்லையாபிள்ளை அவர்களின் மருமகனுமாவார்.

அன்னுரின் பூத உடல் தகனக் கிரியைக்காக அவரது இருபாலை இல்லத்திலிருந்து இன்று 8ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். [6128]

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணபிள்ளை விசாலாட்சி

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை விசாலாட்சி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை (பெஞ்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிராஜா (திருமலை), தியாகராஜா (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), துரைராஜா (துரை அன்கோ உரிமையாளர்), செங்கமலம், காலஞ்சென்ற செல்லமுத்து, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சரவணமுத்து, கணபதிப்பிள்ளை. Dr A. கிருஷ்ணசாமி, தெய்வானைப்பிள்ளை, முத்துப்பிள்ளை. நாகேஸ்வரி ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று 8-2-83 செவ்வாய்க்கிழமை காலை ஆனைப்பந்திச்சந்தி 232, நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கி. துரைராஜா. 6130

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126